ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

23.01.2013 - மலர் 09, இதழ் 47

## அருளின் வடிவமாக, உலகத்தாரின் விடிவுக்காக தன் வாழ்நாளையே அர்ப்பணித்த

# முஹம்மத் நபி (ஸல்) அவர்கள்




தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மாருதப்புரவீகவல்லி'




ஆக்கம்: அரியாலையூர் சி.சிவதாசன்

தென்னிந்திய சோழ அரசுக்கும் இலங்கைத் தீவின் வடதிசை கதிர மலை அரசிற்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் ஏற்படத் தொடங்கின. கதிரமலை அரண்மனைக்குச் சென்று திருமணத்தினை நிறைவேற்றி இனிதே வாழ்வோம் எனப் பலமுறை மாருதப்புரவீகவல்லியை மன்னன் உக்கிரசிங்கன் வலியுறுத்திக் கேட்டபோதும் மாருதப்புரவீகவல்லி மறுத்துவிட்டாள். முருகன் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடந்த பின்னரே, எமது திருமணம் நடைபெற வேண்டும். அதுவரை பொறுத்திருப்பதே நலமானது என மாருதப்புரவீகவல்லி மன்னன் உக்கிரசிங்கனிடம் அன்பாக வேண்டினாள்.



# காங்கேசன்துறை

வளவர்கோன் பள்ளத்தில் பாளையமிட்டிருந்த உக்கிரசிங்கன் மாருதப்புரவீகவல்லியின் வசதி கருதி குமாரத்திப் பள்ளமாளிகைக்குச் சென்று சிலகாலம் அங்கிருந்தவாறே, அரச பரிபாலனம் செய்து வந்தான். மாருதப்புரவீகவல்லியின் கோவில் கட்டும் பணிகளுக்கும் அவன் முழு ஒத்துழைப்பு வழங்கிவந்தான்.

மாருதப்புரவீகவல்லியோடு இடையிடையே கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு உக்கிரசிங்கன் சென்று சிவனை வணங்கி வரலானான். ஒருநாள் மாருதப்புரவீகவல்லி உக்கிரசிங்கனை அழைத்துக்கொண்டு கீரிமலை அடிவாரத்தில் தவமிருந்து வரும் நகுல முனிவரிடம் சென்றாள். தியானத்திலிருந்த நகுல முனிவர் அவர்கள் வருகையை உணர்ந்து கண்விழித்து இருவரையும் வரவேற்றார். குதிரை முக நோயினால் பீடிக்கப்பட்டிருந்து சுகமடைந்த மாருதப்புரவீகவல்லியை அழகு தேவதையாகக் கண்ட நகுல முனிவர் பெரிதும் மகிழ்ந்து இருவரையும் தன்னருகே அழைத்து ஆசி வழங்கினார். "குழந்தைகளே! இறைவன் உங்கள் இருவரையும் இணைத்துப் பார்க்க விரும்பினார். அது நடந்துவிட்டது. கோவிற்கடவை முருகன் கோவில் திருப்பணிகள் நிறைவுற்றதும் இருவரும் மாலை மாற்றி முறைப்படி திருமணம் செய்து நன்றே வாழ்வீர்கள். அதுவரை பொறுத்திருங்கள்" என்று கூறி அவர்களை அனுப்பிவைத்தார்.

நாட்கள் நகர்ந்தன. கோவிற்கடவையில் மேற்கொள்ளப்படும் முருகன் கோவில் திருப்பணிகள் முழுமைபெற்றன. கோவிலில் வைப்பதற்கான மூல விக்கிரகங்களை தென்னிந்தியாவிலிருந்தே கொண்டுவர வேண்டும். அதன் காரணமாக, மாருதப்புரவீகவல்லி தன் தந்தை திசை உக்கிரசோழனுக்குச் செய்தி அனுப்பினாள். மகளின் செய்தி கேட்டு உள்ளம் மகிழ்ந்த திசை உக்கிரசோழன் மூல விக்கிரகங்களை அமைக்கும் பெரும் பணியை தன்னாட்டு சிற்பக்கலை வல்லுனர்களிடம் கையளித்தான். விக்கிரகங்களை இலங்கைத் தீவுக்குக் கொண்டு செல்லும்போது, தானும் தனது மனைவி வானவன் மாதேவியும் இலங்கைத் தீவு செல்ல வேண்டும் என முடிவெடுத்தான். அவர்கள் தமது மகள் மாருதப்புரவீகவல்லியையும் அவளை திருமணம் செய்யப்போகும் உக்கிரசிங்கனையும் காண அவாவுற்றனர்.

இதனால், மரக்கலங்கள் இலங்கைத் தீவை நோக்கிப் புறப்பட ஆயத்தங்கள் செய்யப்பட்டன. ஒரு மரக்கலத்தில் திசையுக்கிரசோழனும் அவன் மனைவியும், இன்னொரு மரக்கலத்தில் கோவிலுக்கான விக்கிரகங்களும், வேறொரு மரக்கலத்தில் தில்லைவாழ் அந்தணர்களும், படைவீரர்கள் வேறு ஒரு மரக்கலத்திலுமாக, ஆதிகாலை சூரிய உதயத்திற்கு முன்னராக இலங்கைத் தீவின் வடதிசை நோக்கிப் புறப்பட்டார்கள். மரக்கலங்கள் புறப்பட்ட நேரத்திலிருந்து கடலில் எதுவித இயற்கை இடையூறுகளும் ஏற்படவில்லை. அதனால் மரக்கலங்கள் அன்று மாலையே ஆதவன் மேற்குக்கரையை அடைய முன்னரே, இலங்கைத் தீவின் வட கடலோரம் வந்தடைந்தன. கீரிமலையின் கிழக்காக, சிறிதளவு தூரத்தில் மரக்கலங்கள் நிறுத்தப்பட்டு அனைவரும் தரை இறங்கியதோடு, விக்கிரகங்களையும் இறக்கி பாதுகாப்பாக ஓரிடத்தில் வைத்தனர். இந்த மரக்கலங்கள் வந்தடைந்த இடப்பகுதியே இன்று 'காங்கேசன்துறை'என நாம் அழைக்கும் இடமாகும். முருகப் பெருமானுக்கு 'காங்கேசன்' என்ற பெயரும் உண்டு.

முருகப்பெருமானின் விக்கிரகம் வந்து இங்கு இறங்கியமையால் இவ்விடம் காங்கேசன்துறை எனப் பெயர் பெற்றது.

அதேவேளை, மாருதப்புரவீகவல்லி உக்கிரசிங்கனுடன் மரக்கலங்கள் நிறுத்தப்பட்டுள்ள இடம் நோக்கிஆவலுடன் விரைந்தாள்.

(தொடரும்)

---

விஜய் Bookvin

இணைந்து வழங்கும் கேள்வி-பதில்

# அறிவுத் தேடல்

**நீங்களும் இப்பகுதியில் உங்கள் கேள்விகளைக் கேட்கலாம். இந்தவாரம் தலா ருபா 500 பெறுமதியான நூல்களை பரிசாகப் பெறும் கேள்விகள்.**

*** அண்மையில் மீன் மழை பொழிந்தமை அனைவரும் அறிந்த விடயமே! இது எவ்வாறு சாத்தியமாகின்றது?**

**கே.பி.ஏ.காபிழ், நொக்ஸ்ரோட், மூதூர் -04**



மீன்மழை, தவளை மழை என பல விசித்திர சம்பவங்கள் உலகெங்கிலும் பதிவாயிருக்கின்றன. நினைக்கும்போது பொய்யெனத் தோன்றினாலும் அது நிகழக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன. 'Tornado' எனப்படும் வலுவான சுழல்காற்று ஒரு நீர்நிலையின் மேலாகச் செல்லும்போது, அதன் அசுர சுழற்சியில் ஈர்க்கப்பட்டு, நீருடன் சேர்த்து நீர்வாழ் உயிரினங்களும் வான் நோக்கி ஈர்க்கப்படுகின்றன. இந்த 'Tornado' சுழல்காற்று முடியும் இடத்திலிருந்து பல மீற்றர் தூரத்திற்கு அவை விசிறப்பட்டு, எங்கேயோ ஓரிடத்தில் வானிலிருந்து மழையாக வந்து விழுகின்றன. இயற்கையின் அற்புத நிகழ்வுகளில் இதுவும் ஒன்று.

*** 1969 இல் நீல் ஆம்ஸ்ட்ரோங் நிலவில் காலடி எடுத்து வைத்தார். இதன்பின்னர், இவ்வாறான சாதனையை யாரும் நிகழ்த்திக்காட்ட முன்வரவில்லை. இதற்கான காரணம் என்ன?**

**வை. சியாட், நேகம, நேகம்பஹா**



நிலவை நோக்கி மனிதன் ஏழு பிரயாணங்களை மேற்கொண்டுள்ளான். அவற்றில் 'Apollo 13' பயணமானது, இயந்திரவியல் கோளாறு காரணமாக, இடைநடுவில் கைவிடப்பட்டது. இதில் இருந்த விண்வெளி வீரர்களும் மயிரிழையில் உயிர் தப்பினர். இதுதவிர, ஏனைய 5 பயணங்களின் விபரங்கள் பின்வருமாறு!

| பெயர் | பூமியிலிருந்து... | பயணித்த வீரர்கள் [3 ஆம் நபர் நிலவில் இறங்கவில்லை] | நிலவில்... |
|---|---|---|---|
| அப்பலோ 12 | 14.11.1969 | சார்ல்ஸ் கொன்ரப், அலன் பீன், ரிச்சாட் கோன்டோ | 19.11.1969 1 நாள் 7 மணி 31 நிமிடம் |
| அப்பலோ 14 | 31.01.1971 | அலன் ஷெப்பட், எட்கர் மிச்செல், ஸ்டுவார்ட் ருஸா | 05.02.1971 1 நாள் 9 மணி 30 நிமிடம் |
| அப்பலோ 15 | 26.07.1971 | டேவிட் ஸ்கொட், ஜேம்ஸ் இர்வின், அல்பிரட் வோடென் | 30.07.1971 2 நாள் 18 மணி 55 நிமிடம் |
| அப்பலோ 16 | 16.04.1972 | ஜோன் யங், சார்ல்ஸ் டியூக், தோமஸ் மெட்டினிலி | 21.04.1972 2 நாள் 23 மணி 02 நிமிடம் |
| அப்பலோ 17 | 07.12.1972 | இயூஜின் செர்னன், ஹரிஸஷ் சிமிட், ரொனல்ட் ஈவன்ஸ் | 11.12.1972 3 நாள் 2 மணி 59 நிமிடம் |

**கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

அறிவுத் தேடல்,
'விஜய்'
த.பெ.இல: 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 5 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, மனிதர்கள் கல்லாயுதங்களைப் பாவித்துள்ளனர்

மானிட சமூகம், கற்களினாலான ஆயுத பாவனையினை இற்றைக்கு 5 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பித்துவிட்டதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினூடாகத் தெரிய வந்துள்ளது. வேட்டையாடுவதற்காகவே, மனிதர்கள் கற்களினாலான ஆயுதங்களைப் பாவிக்கத் தொடங்கியுள்ளனர். இறந்து கிடந்த ஸ்பிரிங்பொக் மானொன்றின் உடல் மற்றும் வில் ஒன்றை ஆய்வுக்குட்படுத்தியதை அடுத்தே, ஆதிகால மனிதனின் கற்களினாலான ஆயுத பாவனை பற்றி தெரியவந்துள்ளது.

ஆதிகால மனிதர்கள், இலக்கை நோக்கி எய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட கற்களினாலான கூர் ஆயுதங்களை 3 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பயன்படுத்தி வந்துள்ளனர் என்று இதுவரை நம்பப்பட்டு வந்தது. எனினும், தென்னாபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட கல்லாலான கூராயுதங்களை ஆராய்ந்தபோது, அவை 5 லட்சம் ஆண்டுகள் பழமைவாய்ந்தவை எனத் தெரியவந்துள்ளது.

அத்துடன், இதில் காணக்கிடைத்த அடையாளங்கள் ஸ்பிரிங்பொக் மானின் மீது ஏவப்பட்ட கூராயுதத்தில் உள்ள அடையாளங்களுடன் ஒத்திருந்ததாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இதனை அடுத்து, கல்லாலான கூராயுதங்களை மனிதர்கள் 5 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

பண்டைய கால மனிதன் நியண்டர்தால் மானிடனாக மாற்றமடைவதற்கு முன்பே, கல்லினால் செய்யப்பட்ட கூரான ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று இந்த ஆய்வுக் குழுவின் விஞ்ஞானி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான ஆயுதங்களை உருவாக்குவதற்கு அதிக திட்டமிடலும் முயற்சியும் தேவையென்றாலும், இவ்வாறான கூரான ஆயுதங்களைப் பயன்படுத்தித் தாக்குதல்களை மேற்கொள்ளும்போது, இலக்கு வைக்கப்படும் உயிரினங்கள் துரிதகதியில் தமது முடிவை எட்டுகின்றன. கற்காலத்துடன் தொடர்புடைய தொல்பொருள் அகழ்வுகள் பலவற்றில் இவ்வாறான கல் ஆயுதங்கள் கிடைக்கப்பெற்றுள்ளமையானது, 3லட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கற்களினாலான ஆயுத பாவனை பிரபல்யம் பெற்றிருந்தமையை வெளிப்படுத்துகின்றது.



## ஆய்வுகள் தெரிவிப்பு

தென்னாபிரிக்காவின் 'காதுபேண் 1' என்றழைக்கப்படும் தொல்பொருள் அகழ்வு இடத்தில் இருந்தே கல்லினாலான இந்த கூர் ஆயுதங்கள் கிடைத்துள்ளன. இதன்படி, இந்த கல் ஆயுதங்கள் ஹோமோ ஹைடெல்பர்ஜென்சிஸ் எனும் மானிடரால் மத்திய ப்ளெஸ்டோசின் காலப்பகுதியின் ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. நியண்டர்தால் மானிடருக்கும் நவீன மனிதருக்கும் பொதுவான இறுதி ஆதி மனிதனாகவே இவர்கள் கருதப்படுகின்றனர். அரிசோனா மாகாண பல்கலைக்கழகத்தினதும் கேப்டவுன் பல்கலைக்கழகத்தினதும் ஆய்வாளர்களைக்கொண்ட குழுவே தென்னாபிரிக்காவில் இந்த ஆய்வினை முன்னெடுத்துள்ளது.

- ப்ரியா



விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey@Wijeya.lk

## வாசகர் முகம்

இந்த வாரம்
இடம்பெற்றிருப்பவர்
எம்.றிழா,
அக்குறனை.





# 'விஜய்' தரும் சைக்கிள் பரிசு!



வாரம்தோறும் சைக்கிள்களை வெல்வதற்கான வாய்ப்பு...

**நீங்கள் செய்ய வேண்டியது:**

இங்கு கேட்கப்படுகின்ற கேள்விக்கான விடை இந்த வாரம் 'விஜய்' பத்திரிகையில் இடம்பெற்றுள்ள ஏதோ ஓர் ஆக்கத்தினுள் பொதிந்துள்ளது. அந்த விடையைக் கண்டுபிடித்து உடனடியாக எமக்கு தபாலிடுங்கள் (நேரடியாக ஒப்படைப்பதைத் தவிர்க்கவும்).

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படுபவருக்கு சைக்கிளொன்று பரிசாக வழங்கப்படும்.

**இந்த வாரக் கேள்வி 12**

பிரான்ஸ் அரசாங்கம் லூயி பாஸ்ச்சருக்காக அமைத்த ரசாயனகூடத்தின் பெயர் என்ன?

கீழ்க்காணப்படும் கூப்பனில் சரியான விடையை எழுதி தபாலட்டையில் ஒட்டி 01.02.2013 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த முகவரிக்கு தபாலிடுங்கள்.

**போட்டி இல: 08 இல் சைக்கிளை வெற்றி கொள்பவர்...**

எம்.ஐ.அம்ஜத் அக்கீல்,
217 B பதுவத்த,
எஹெலியகொட.

கேள்வி இல : 12
விடை : ..................................
பெயர் : ..................................
வயது : ..................................
முகவரி : ..................................
மாவட்டம் : ..................................
தொ.பே.இல : ..................................

அனுப்ப வேண்டிய முகவரி;
சைக்கிள் பரிசு (12)
'விஜய்'
த.பெ.எண்: 2037 கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிப்பைத் தவிர....



அன்பரசன், சிவா, கிஷோர் மூவரும் நண்பர்கள். மூவரும் நன்றாகப் படிப்பார்கள். ஒவ்வொரு பரீட்சையிலும் முதல் மதிப்பெண் வாங்குவதில் மூவருக்கும் போட்டிதான்.

மூவரில் அன்பரசன் ஏனைய இருவரையும் விட, கொஞ்சம் வித்தியாசமானவன். படிப்பைத் தவிர, விளையாட்டு, இசை, ஓவியம் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டிருந்தான். சிவாவும், கிஷோரும் எப்போதும் படிப்பு ஒன்றே முக்கியம் எனக்கருதி ஏனைய துறைகளில் ஆர்வம் காட்டாமல் இருந்து வந்தனர்.

ஒரு ஞாயிறன்று சிவாவும், கிஷோரும் அன்பரசன் வீட்டுக்குச் சென்றபோது, அவன் அண்ணல் காந்தியடிகளின் ஓவியத்தை வரைந்துகொண்டிருந்தான். அதைப் பார்த்த சிவா, "ஏண்டா இந்தப் படத்தை வரைந்து கொண்டிருக்கிறாய். அறிவியல் சம்பந்தமான படத்தையோ, உலக வரைபடத்தையோ வரைந்தால் படிக்கிற பாடத்திற்கு உபயோகமாயிருக்கும். அதைவிடுத்து தலைவர்கள் படத்தை வரைந்து என்ன செய்யப்போகிறாய்?" என்றான் சிவா.

"படிப்புத்தான் முக்கியம் என்பது எனக்குத் தெரியும். ஆனால், ஓய்வு நேரங்களில் இதைப் போல ஏனைய விருப்பமான துறைகளிலும் ஈடுபட்டு வந்தால் பிற்காலத்தில் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்முடைய தமிழாசிரியர் கூறி இருக்கிறார். அதனால்தான் முடிந்தவரை இசை, ஓவியம் என்று கவனம் செலுத்தி வருகிறேன். நீங்களும் முயற்சி செய்துபாருங்களேன்" என்றான் அன்பரசன்.

சில நாட்களுக்குப் பின் அவர்கள் ஊரில் ஒரு நிறுவனத்தினர், தங்கள் கம்பெனி நிறுவனரின் பிறந்தநாளைக் கொண்டாடினர். அப்போது சிறுவர்களுக்கு ஓவியப் போட்டிகளையும் நடத்தினர். அந்தப் போட்டியில் கலந்து கொள்வதென்று அன்பரசன் முடிவு செய்தான். ஆசிரியரிடம் அதற்கான வழிமுறைகளைக் கேட்டறிந்தான்.

"அன்பரசா, உன்னிடம் நிறையத் திறமைகள் இருக்கின்றன. படிப்பில் உனக்கிருக்கும் ஆற்றலைப் போலவே ஏனைய துறைகளிலும் திறமையோடுதான் இருக்கிறாய். சந்தோஷமாகப் போட்டியில் கலந்துகொள். வெற்றி நிச்சயம்" என்று வாழ்த்தி அனுப்பினார் ஆசிரியர்.

போட்டியில் கலந்துகொண்ட அன்பரசன், காந்தி ஓவியத்தை தத்ரூபமாக வரைந்திருந்தான். அந்த ஓவியத்திற்குத்தான் முதல் பரிசும் கிடைத்தது. '10 ஆயிரம் ரூபாய் பரிசு எதிர்காலத்தில் அவன் படிப்பிற்கு கைகொடுக்கும்' என்று அவனது பெற்றோர் பாராட்டினர்.

பரிசளிப்பு விழாவுக்கு பெற்றோருடன் சென்றான் அன்பரசன். மேடையேறிப் பரிசை வாங்கிய அன்பரசன், "இந்தப் போட்டியில் நான் பங்குபற்றியது, பரிசு கிடைத்தது எல்லாவற்றிற்குமே எங்களின் தமிழாசிரியர் அளித்த ஊக்கம்தான் காரணம். அவருக்குத்தான் நான் நன்றி சொல்லவேண்டும்" என்றான்.

அப்போது அங்கு வந்த சிவாவும், கிஷோரும் அன்பரசனைப் பார்த்துப் பேசக் கூச்சப்பட்டு ஒதுங்கிச் சென்றனர். "நில்லுங்கள் நண்பர்களே! நீங்கள் என்னைப் பாராட்டாவிட்டாலும் பரவாயில்லை. நீங்களும் ஏதாவது ஒரு துறையில் முயற்சிசெய்யுங்கள். உங்களுக்கும் ஒருநாள் பரிசும், பாராட்டும் கிடைக்கும். நீங்கள் முயற்சி செய்வீர்களா?" என்றான் அன்பரசன்.

அன்று நாங்கள் உன்னைக் கேலி செய்துவிட்டோம். இன்றுதான் உன் முயற்சியின் பலனையும், உன் திறமையையும் உணர்ந்தோம். இனிக் கண்டிப்பாக நாங்களும் முயற்சி செய்வோம்" என்று கூறி, அன்பரசனைப் பாராட்டினர் இருவரும்.

# யாருடைய வேப்பமரம்?



ஆலமரத்திற்கு அடியில் இருந்த மேடைமீது உத்தமசீலர் அமர்ந்திருந்தார். மக்கள் அவருக்கு முன்பாகக் கூடி நின்றனர். அந்தக் கிராமத்தின் நீதிபதி அவர்தான். இன்று வீரமுத்து தொடுத்த வழக்கிற்காக, ஊர் கூடியிருந்தது. இவ்வழக்கில் வீரமுத்து பேசியபோது....

"ஐயா வணக்கம். என் வீட்டிற்கும், பக்கத்து வீடான மீனாட்சியின் வீட்டிற்கும் இடையே ஒரு பெரிய வேப்பமரம் உள்ளது. அது எனக்குச் சொந்தமானது. அதை வெட்டப் போகிறேன் என்று சொன்னால் மீனாட்சி சண்டைக்கு வருகிறாள். என் மரத்தை வெட்ட எனக்கு அனுமதி தர வேண்டும்" என்று படபடவென வீரமுத்து சொல்லி முடிக்க, நீதிபதி உத்தமசீலர், மீனாட்சியைப் பார்த்து, "நீ என்ன சொல்ல விரும்புகிறாய்" என்று கேட்டார்.

நீதிபதியை வணங்கிய மீனாட்சி, "ஐயா நான் சிறுமியாக இருக்கும்போது, அந்த வேப்பமரக்கன்றை நட்டு, நாள் தவறாமல் நீர் ஊற்றி வளர்த்துள்ளேன். இப்போது அந்த மரம் பெரிதாகிவிட்டதால், அது எங்கள் இரண்டு வீட்டிற்கும் இடையில் இருப்பது போன்ற தோற்றத்தைத் தருகிறது. உண்மையில் அது எனக்குச் சொந்தமான மரம்தான். அந்த மரத்தால் யாருக்கும் எந்தத் தீமையும் இல்லை. அதை வெட்ட வேண்டாம்" என்று சொல்லி முடித்தாள்.

நீதிபதி சில சந்தர்ப்பங்களில் அந்த மரத்தைப் பார்த்திருக்கிறார். தனது சந்தேகத்தை தீர்த்துக்கொள்ள இருவரிடமும் மாறிமாறிப் பல கேள்விகளைக் கேட்டார். இருவருமே மரம் தமக்குத்தான் சொந்தம் என்று கூறிவிட்டனர்.

"நீங்கள் இருவருமே மரத்துக்குச் சொந்தம் கொண்டாடுவதால் மரத்தை வேரோடு வெட்டிவிட உத்தரவிடுகிறேன். வெட்டியபின் ஆளுக்குப் பாதியாகப் பிரித்துக்கொள்ளுங்கள்" என்றார் நீதிபதி உத்தமசீலர்.

இதைக்கேட்ட வீரமுத்து மகிழ்ச்சி அடைந்தான். "ஐயா, நீங்கள் கூறியதை ஏற்றுக்கொள்கிறேன். தாங்கள் நல்ல முறையில் தான் கூறினீர்கள்" என்றான். வெட்டிய மரத்தில் பாதி தனக்கு வந்துவிட்டால் அதைவிற்றுப் பணமாக்கிவிடலாம் என்று நினைத்தான் அவன். ஆனால், மீனாட்சி, கவலையுடன் "ஐயா எனக்கு மரம் வேண்டாம். வீரமுத்து அண்ணனே மரத்தை வைத்துக்கொள்ளட்டும். ஆனால், அந்த மரத்தை வெட்ட வேண்டாம்" என்று கண்களில் நீர்மல்க நீதிபதியை வணங்கிக் கேட்டாள்.

"ஏன் இப்படிச் சொல்கிறாய், பிரச்சினைக்குரிய மரத்தை அகற்றிவிடுவதுதானே நல்லது. அதனால், உனக்கும் பாதி மரம் கிடைக்கிறதல்லவா?" என்று கூறினார் நீதிபதி.

"ஐயா, நான் சிறுவயதிலிருந்தே என் குழந்தை மாதிரி அந்த மரத்தை வளர்த்து வருகிறேன். இந்த மரத்தால்தான் பிரச்சினை என்றாலும் அதை வெட்ட என் மனம் அனுமதிக்கவில்லை. இந்த மரத்தை நம்பி எத்தனையோ குருவிகள், காகங்கள் வாழ்கின்றன. எத்தனையோ பெரியவர்கள் இளைப்பாறிப் போகிறார்கள். எத்தனையோ சின்னஞ்சிறுவர்கள் நிழலில் விளையாடி மகிழ்கிறார்கள். அனைவருக்கும் தன்னலம் பாராது சுத்தமான காற்றையும் தருகிறது. இப்படிப் பலருக்கும் பயன்படும் மரத்தை எங்கள் பிரச்சினைக்காக வெட்டிவிடக்கூடாது. எனக்குப் பயன்தராவிட்டாலும், வீரமுத்து அண்ணனே பலனை அனுபவிக்கட்டும். ஆனால், மரத்தை மட்டும் வெட்டக்கூடாது என்று உத்தரவிடுங்கள்" என்று மன்றாடினாள். ஒரு நிமிடம் அந்த இடம் அமைதியில் மூழ்கியது. லேசாக சிரித்துக்கொண்டே நீதிபதி பேசினார்....

"மரம், மீனாட்சிக்குச் சொந்தமானது என்று தீர்ப்பளிக்கிறேன். பெற்றவர்களுக்குத்தான் பிள்ளையின் அருமை தெரியும் என்பார்கள். அதேபோல மரத்தை வளர்த்தவர்களுக்குத்தான் மரத்தின் அருமை தெரியும். ஆனால், மரத்தை வெட்டி லாபமடைய நினைக்கும் வீரமுத்து மரத்துக்குச் சொந்தக்காரனாக இருக்கமுடியாது. பொய்யான வழக்குத் தொடுத்த இவன், ஊர்ப் பொது இடத்தில் 5 மரக்கன்றுகளை நட்டு ஒரு வருடம் பராமரிக்க வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்" என்றார் உத்தமசீலர். அனைவரும் உத்தமசீலரின் தீர்ப்பை ஆமோதித்தனர். மீனாட்சி ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகத்தாருக்கே ஓர் அருளாக வந்த முஹம்மத் நபி (ஸல்) அவர்கள்

தற்போதுள்ள சவூதி அரேபியா நாட்டிலுள்ள மக்காவில் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கி.பி. 570 ஆம் வருடம் மூன்றாவது அரபு மாதமாகிய ரபிஉல் அவ்வல் மாதம் பிறை 12 இல் பிறந்தார்கள். அவரது தாய் ஆமினா. தந்தை அப்துல்லாஹ். பிறப்பதற்கு முன்னர் தந்தையையும் பிறந்து ஒருசில வருடங்களில் தாயையும் இழந்து அநாதையான அவர்கள், தனது நெருங்கிய உறவினர்களது பராமரிப்பில் வளர்ந்தார்கள்.

சிறுபிராயம் முதல்கொண்டே, எவ்வித அனாச்சாரங்களிலும் சம்பந்தப்படாமல் சகலராலும் விரும்பப்பட்ட கண்ணியமானவராகவே வளர்ந்து வந்தார்கள். அன்னாரது ஒழுக்கவிழுமியங்களால் கவரப்பட்ட அரபு சமூகம், அவருக்கு 'அல் அமீன்' (நம்பிக்கை நாணயமானவர்), அஸ்ஸாதிக் (உண்மை பேசுபவர்) என்று பெயரிட்டழைத்தது. ஆனால், அவர்கள் வாழ்ந்த சமூகம் சிறிய விடயங்களுக்காக, பல வருடகால யுத்தங்களில் ஈடுபட்டிருந்தது. அத்துடன், விபச்சாரம், மதுஅருந்துதல், சூதாட்டம், அம்பெறிந்து குறிகேட்பது, சூனியம் செய்வது போன்ற விரும்பத்தகாத செயல்கள் அந்த சமூகத்தில் மலிந்து கிடந்தன. குறிப்பாக, கோத்திரச் சண்டைகளில் அச்சமூகத்தவர்கள் அதிகம் ஈடுபட்டார்கள். இனவெறி, கோத்திரவெறி அங்கு தாண்டவமாடியது. இந்த இழிநிலையைக் கண்டு உள்ளம் வெதும்பிய முஹம்மத் (ஸல்) அவர்கள், மக்காவிலுள்ள 'ஹிரா' எனப்படும் குகைக்குச் சென்று மிக நீண்ட சிந்தனையில் ஈடுபட்டு சத்தியத்தைத் தேடலானார்கள்.

சகல ஜீவராசிகளையும் படைத்த ஓர் இறைவன் இருக்க வேண்டும் என்றும் வாழ்வுக்கு ஓர் அர்த்தம் இருக்க வேண்டும் என்றும் சிந்தித்தார்கள். இப்படியாக, பல நாட்கள் கழிந்தபோது, ஒருநாள் அல்லாஹ்வின் வானவர் ஜிப்ரயீல் (அலை) என்பவர், இறை வேதமான அல்குர்ஆனின் முதல் வசனமான 'வாசிப்பீராக' எனும் வாசகத்துடன் ஆரம்பிக்கும் ஐந்து வசனங்களை அல்லாஹ்விடமிருந்து எடுத்துவந்து அவருக்கு ஓதிக்காட்டினார்கள். அன்று முதல் அவர்கள் 'தீர்க்கதரிசி' என்னும் கருத்தைத் தரும் 'நபி' எனும் பட்டத்தைச் சுமந்தார்கள். இதன் பின்னர் தொடர்ந்து 23 வருடங்களாக அவர்கள் மீது இறக்கப்பட்ட வசனங்கள் 'அல்குர்ஆன்' எனும் பெயரில் நூலுருப்பெற்றன.

கதீஜா எனும் விதவைப் பெண்ணை திருமணம் செய்த முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு ஸைனப், ருகையா, உம்மு குல்தூம், பாத்திமா ஆகிய பெண்பிள்ளைகளும் அல்காஸிம், அப்துல்லாஹ் ஆகிய ஆண் பிள்ளைகளும் கிடைத்தன. நபி (ஸல்) அவர்கள் இந்த உலகில் ஏற்படுத்திய மாற்றம் மிகவும் வித்தியாசமானதாகும். அவர்கள் மனிதர்களை இறைவனுடன் தொடர்புபடுத்தும் ஓர் ஆன்மீக வாதியாக மட்டும் இருக்கவில்லை. மாறாக, முழு வாழ்வுக்கும் வழிகாட்டும் பூரணவாழ்க்கைத் திட்டமான இஸ்லாத்தின் முழு வடிவமாகத் திகழ்ந்தார்கள். ஆன்மீகம் - லௌகீகம், உலகம் - மறுமை, ஆத்மா - உடல் என்று அவர்கள் பிரித்து நோக்கவில்லை. முழுமையான ஆளுமை படைத்த தனிமனிதர்கள், தனிமனிதர்களால் உருவாகும் குடும்பம், குடும்பங்களால் ஆன சமூகம், சமூகத்தை நல்லாட்சி செய்யும் அரசு என்று அனைத்துத் தளங்களிலும் அவர்களது வழிகாட்டல்கள் பரிணமித்தன. அரசியல், பொருளாதாரம், சட்டம், குடும்பவியல், கல்வி, சமூகவியல் என்று அனைத்து அலகுகளையும் அவர்களது வழிகாட்டல்கள் தழுவி நின்றன. ஏக காலத்தில் நபி (ஸல்) அவர்கள், வணக்க வழிபாடுகளை முன்நின்று நடத்தும் இமாம் (தலைவர்) ஆகவும் அரசாங்கத் தலைவராகவும் நீதிபதியாகவும் படைத் தளபதியாகவும் வியாபாரியாகவும் ஆசானாகவும் குடும்பத் தலைவனாகவும் விளங்கியதிலிருந்து அவர்களது பன்முக ஆளுமையைப் புரிந்துகொள்ள முடியும்.

நபி (ஸல்) அவர்கள் மக்காவில் 13 வருடங்கள் வாழ்ந்த பின்னர், தனது தோழர்கள் சகிதம் இடம்பெயர்ந்து மதீனா வந்து, அங்கு 10 வருடங்களைக் கழித்தார்கள். அங்கு முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள் மற்றும் வேற்றுமதத்தவர்களை உள்ளடக்கிய ஓர் இஸ்லாமிய அரசை நிறுவினார்கள். மதீனா வந்ததன் பின்னர், தனது


> முழு வாழ்வுக்கும் வழிகாட்டும் பூர்ண வாழ்க்கைத் திட்டமான இஸ்லாத்தின் முழு வடிவமாக முஹம்மத் நபி (ஸல்) திகழ்ந்தார்கள்

கொள்கையைக் கடுமையாக எதிர்த்தவர்களுடன், பல்வேறுபட்ட யுத்தங்களை சந்திக்க அவருக்கு நேர்ந்தது. தமது நலன்கள் பாதிக்கப்படுகின்றன எனக் கருதிய எதிரிகள், அன்னாருக்கெதிரான பிரசாரங்களையும் செய்து வந்தார்கள். எது எப்படியிருப்பினும், நபி (ஸல்) அவர்களது தூது இருண்ட படலங்களுக்குள் அதாவது, அறியாமை, அநீதி, அடக்குமுறை, அராஜகம், அதர்மம் ஆகியவற்றுக்குள் சிக்கித்தவித்த மக்களுக்கு விடுதலையளிப்பதாகவும் அவர்கள் வாழ்வில் ஒளியேற்றுவதாகவும் அமைந்தது. சமூகவாழ்விலும் குடும்பவாழ்விலும் இருந்த சீர்குலைவுகளை அகற்றி சமூகத்தை முழுமையாக மறுசீரமைத்தார்கள்.

தான் அனுப்பப்பட்டதன் நோக்கத்தை அவர்கள் சுருக்கமாகக் கூறும்போது "கண்ணியமான பண்பாடுகளை முழுமைப்படுத்தவே நான் அனுப்பப்பட்டேன்" என்றார்கள். தன்னைக் கடுமையாக எதிர்த்த யூத சமூகத்தைச் சேர்ந்த ஒருவரது மரண ஊர்வலத்தின் போது, எழுந்து மரியாதை செய்தார்கள். மிருகங்கள் மீதுகூட, அளவிலாத அன்பை வைத்திருந்த அவர்கள், தாகத்தினால் பூமியை நக்கிக்கொண்டிருந்த ஒரு நாய்க்கு, நடத்தைகெட்ட ஒரு பெண் கிணற்றுக்குள் இருந்து நீர் எடுத்துப் புகட்டியதனால் அப்பெண்ணுக்குக்கூட, இறைவன் மன்னிப்பு வழங்கினான் என்று தெரிவித்தார்கள். அநாதையாக வளர்ந்த அவர்களுக்கு சமூகத்திலிருந்த ஏழைகள்,அடிமைகள், விதவைகள், அநாதைகள் போன்றோரின் உள நிலையை நன்கு புரிந்துகொண்டு உதவி செய்ய முடிந்தது. சதாவும் புன்முறுவலுடன் அவர்கள் இருந்தார்கள். கைலாகு செய்யக் கைகொடுப்பவர்கள் கையை எடுக்கும் வரை அவர்கள் கையை எடுக்கமாட்டார்கள். எவரையும் அவர்களின் தனிப்பட்ட காரணங்களுக்காக, பழிவாங்கியதாக வரலாறு கிடையாது. எனவேதான், "உம்மை நாம் உலகத்தாருக்கே ஓர் அருளாக மட்டுமே அனுப்பினோம்" என்று அல்லாஹ் புகழ்கின்றான்.

நபி (ஸல்) அவர்களுக்கும் அவர்கள் வாழ்ந்த சமூகத்துக்கும் இடையிலான நெருங்கிய உறவு பற்றிக் கூறி வந்த அன்னாரது மனைவி கதீஜா (ரலி) அவர்கள் "நீங்கள் ஏழைகளுக்குக் கைகொடுக்கின்றீர்கள். நாதியற்றவர்களுக்குத் துணையாக இருக்கின்றீர்கள். இனபந்துக்களைச் சேர்ந்து நடக்கின்றீர்கள். விருந்தாளிகளுக்கு விருந்து படைக்கின்றீர்கள்" என்றார்கள். நபி (ஸல்) அவர்களது ச்.றிய தந்தை ஜஃபர் (ரலி) அவர்கள், அப்போதைய அபீசீனிய நாட்டின் நஜ்ஜாஸ் எனும் கிறிஸ்தவ மன்னனின் சபையில் சென்று கூறிய வாசகங்கள் இங்கு முக்கியமாக நோக்கத்தக்கவை; "எம்மிடம் வந்துள்ள இந்த தூதுவர் அயல்வீட்டாருக்கு நோவினைச் செய்வது, இறந்தவற்றின் மாமிசங்களைப் புசிப்பது, உறவு ஜனங்களது உறவுகளைத் துண்டிப்பது போன்றவற்றில் ஈடுபட வேண்டாம் என்று பணிக்கிறார்" என்று கூறினார். இதிலிருந்து நபி (ஸல்) அவர்களின் தூது சம்பந்தமான ஒரு பரந்துபட்ட அறிவை பெற்றுக்கொள்ள முடியும்.

அந்தவகையில், அருளின் வடிவமாக, உலகத்தாரின் விடிவுக்காக தன் வாழ்நாளையே அர்ப்பணித்த முஹம்மத் நபி (ஸல்) அவர்களை, இன்று சுமார் 156 கோடி பேர் தமது தலைவராக ஏற்று வாழ்ந்து வருகிறார்கள். அன்னார் தனது 63 ஆவது வயதில் மதீனாவில் மரணமடைந்து அங்கேயே அடக்கம் செய்யப்பட்டார்கள்.



-அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம். பளீல்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசர்நாய்க்கடி நோ

# லூயி ப

**உலக வரலாற்றில் பல விஞ்ஞானிகளின் பெயர்கள் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளன. அந்தவகையில், லூயி பாஸ்ச்சரின் பெயரும் குறிப்பிடத்தக்கதாகும். ஏனெனில், விசர்நாய்க்கடி நோய்க்கான தடுப்பூசி மருந்தினைக் கண்டுபிடித்த பெருமை லூயி பாஸ்ச்சரையே சாரும் என்பதனாலாகும்.**



லூயி பாஸ்ச்சர்

## லூயி பாஸ்ச்சர் (1822-1895)

1822 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் திகதி கிழக்கு பிரான்ஸின் டோலே பிரதேசத்தில் லூயி பாஸ்ச்சர் பிறந்தார். தோல் பதனிடும் தொழிலில் அவரது தந்தையார் ஈடுபட்டிருந்தார். லூயியின் பாடசாலைக் கல்விக் காலத்தின் பின்னர் பாஸ்ச்சர் குடும்பம், தமது அயல் நகரான ஆபோயிஸ் நகருக்கு குடிபெயர்ந்தது. அங்கு தோல் பதனிடும் தொழிற்சாலை ஒன்றை லூயியின் தந்தையார் வாடகைக்குப் பெற்றுக்கொண்டார்.

லூயி பாடசாலைக் கல்வியில் திறமைகாட்டவில்லை. ஆனாலும், கல்விச் செயற்பாடுகளை அக்கறையுடன் மேற்கொண்டார். 16 வயது நிரம்பியதும் அவரை மேற்படிப்புக்காக, பெரிஸ் நகருக்கு அனுப்புவதற்கு அவரது ஆசிரியர்கள் தீர்மானித்தனர். லூயி பெரிஸ் நகருக்குச் சென்றாலும் வீட்டு நினைவுகளில் வாடினார். எப்பொழுதும் வீட்டு நினைவுகளில் மூழ்கிய லூயி, பெரிஸ் ஆசிரியர்களின் அனுதாபத்தைப் பெற்றுக்கொண்டு மீண்டும் வீடு திரும்பினார். எவ்வாறாயினும், ஆபோயிஸ் நகர வாழ்க்கை லூயிக்குப் பிடிபடவே இல்லை. அதனால், அவர் ஆபோயிஸ் நகரில் இருந்து 25 மைல் தொலைவில் உள்ள பிசனியன் நகருக்குச் சென்றார். அங்குள்ள ஒரு பாடசாலையில் சேர்ந்து அங்கு அவர் திறமையாகக் கல்வி கற்றார். ஓராண்டுகளின் பின்னர், அப்பாடசாலையின் கற்பித்தல் பணிகளுக்கும் அவர் உதவினார். 1842 லூயி மீண்டும் பெரிஸ் நகர் சென்றார். இளைஞனாக இருந்த லூயி, வீட்டு நினைவு காரணமாக, பெரிஸ் நகரில் நீண்ட காலத்தைக் கழிக்கவிரும்பவில்லை.

## ஆய்வுக்கான ஆரம்பம்

இரண்டு வருடங்கள் கடுமையாக உழைத்த லூயி, பிரான்ஸின் பிரபல்யம் பெற்ற மருந்து விற்பனையாளரான 'அந்தனி பிளாட்' எனும் நபரின் உதவியாளராக கடமையாற்றினார். அங்கு தனியே பரிசோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்க அவருக்கு வாய்ப்புக் கிட்டியது.

## முதலாவது கண்டுபிடிப்பு

இக்காலப்பகுதியில் லூயியின் ஒரு கண்டுபிடிப்பு அவரை பிரபல்யம் பெற்ற நபராக மாற்றியது. டாட்டரிக் அமிலத்தின் (இயற்கை காபோ ஒக்சிலிக் அமிலம்) இரண்டு பிரிவுகள் தொடர்பில் தகவல்களை ஆராய லூயி ஆர்வம் காட்டினார். இதன்போது, எளிய வகை டாட்டரிக் அமிலம் மற்றும் பெராடாட்டரிக் அமிலம் என்று இரண்டு பிரிவாக டாட்டரிக் அமிலத்தைப் பிரிக்க முடியும் என்று லூயி கண்டுபிடித்தார்.



ஆய்வொன்றுக்காக ஆய்வு கூடத்தில் ரசாயனப் பொருட்களை பாஸ்ச்சர் தெரிவுசெய்கின்றார்.

## விஞ்ஞானத் துறையில் பல பதவிகள்

1849 இல் ஸ்ரோஸ்பர்க்கில் ரசாயன விஞ்ஞானப் பேராசிரியரான லூயி பாஸ்ச்சர், அங்கு மாரி லோரன்ட் என்ற பெண்ணை விவாகம் செய்தார். பின்னர் 1854 செப்டெம்பர் மாதம் லிலீயில் விஞ்ஞானபீடத்தின் பீடாதிபதியானார். அங்கு மூன்று ஆண்டுகள் மட்டுமே அவர் இருந்தபோதும், அக்காலப்பகுதியில் பல



**1885 ஜூலை 6 ஆம் திகதி மூன்று தினங்களுக்கு முன்பு விசர் நாயினால் கடிக்கப்பட்ட ஜோசப் மேஸ்ட்டர் என்ற 9 வயது சிறுவனுக்கு முதல் முறையாக விசர்நாய்க்கடி தடுப்பூசி மருந்து வழங்கப்பட்டது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ய்க்கு தடைபோட்ட பாஸ்ச்சர்

ஆய்வுகளையும் மேற்கொண்டார். பிற்பட்ட காலத்தில் பல கண்டுபிடிப்புகளை மேற்கொள்ள இந்த ஆய்வுகள் அவருக்கு



உதவியாக இருந்தன.

## மதுசாரம் தயாரிப்பு பற்றிய ஆய்வு

உள்ளூர் வியாபாரியான மொன்சியர் பிகோ என்ற நபர், பீட்ரூட் கிழங்குகளைக் கொண்டு மதுசாரத்தினை உற்பத்தி செய்வதில் பெரும் பிரச்சினை ஒன்றை எதிர்கொண்டார். இதனால், அவர் மதுசாரத்திற்குப் பதிலாக பிரயோசனம் அற்ற லக்டிக் அமிலத்தினை உற்பத்தி செய்தார். மொன்சியர் பிகோ மதுசாரத்தினை உற்பத்தி செய்யப் பயன்படுத்திய பாரிய தாங்கியினை பாஸ்ச்சர் ஆய்வுக்குட்படுத்தினார். அவ்வாறு ஆய்வு செய்யும்போது, அத்தாங்கியினுள் குச்சி வடிவிலான உடலமைப்பினைக் கொண்ட பல சிறிய உயிரிகளை அவர் கண்டார்.

1857 இல் லூயி பாஸ்ச்சர் மீண்டும் கல்வியின் பக்கம் ஆர்வம் செலுத்தினார். இதன்போதே, 'புளிக்க வைக்கும் செயற்பாடு' குறித்து அவர் ஆர்வம் காட்டத் தொடங்கினார். மதுசார உற்பத்திக்கும் லக்டிக் அமிலத்தை உருவாக்கவும் இந்த நடவடிக்கை உதவியது. வைன் உற்பத்தி வரை அவர் தனது செயற்பாடுகளை விஸ்தரித்துக்கொண்டார். மதுசாரத் தயாரிப்புக்கு இந்த நுண்ணங்கிகள் இருக்க வேண்டியது அவசியம் என்றும் ஈஸ்ட் இருந்தால் மட்டுமே மதுசாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்றும் இதன்போது அவர் புரிந்துகொண்டார். குச்சி வடிவிலான பக்ற்றீயா இருந்தால் லக்டிக் அமிலம் உருவாகும் என்றும் வைன் கெட்டுப்போகக் காரணம் இந்த நுண்ணங்கிகள்தான் என்றும் லூயி பாஸ்ச்சர் முடிவுக்கு வந்தார்.

அத்துடன், வெளிக்காரணிகளினாலேயே, இந்த நுண்ணங்கிகள் உருவாகின்றன என்றும் 'மெகொட்' எனப்படும் புழு இனம் இதற்கு சிறந்த உதாரணமாகும் என்றும் லூரயி பாஸ்ச்சர் சுட்டிக்காட்டினார். மேலும், மதுசாரம் தானாக மாற்றம் அடைவதில்லை என்பதை அவர் கண்டுபிடித்தார். காற்றில் வாழும் கிருமிகளின் செயற்பாட்டினாலேயே இந்த நிகழ்வு இடம்பெறுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## தொற்றுநோய் தொடர்பான கற்றல்

அந்நாட்டு மருத்துவ எக்கடமி உறுப்பினராக 1873 இல் பாஸ்ச்சர் தெரிவு செய்யப்பட்டார். அக்காலப் பகுதியானது, பாஸ்ச்சரினால் முக்கியமான ஆய்வுகள் நிகழ்த்தப்பட்ட காலபப் பகுதியாகும். அந்த காலப்பகுதியில் ஜேன் வில்மனால் 'டியூபகியுலொசிஸ்' எனப்படும் 'காசநோய்' ஆனது தொற்றுநோய் என்று உறுதிசெய்யப்பட்டிருந்தது. அத்துடன், கசிமீர் டேவின் என்பவரால் உயிரிகளை அழிக்கும் 'அந்த்ரெக்ஸ்' எனப்படும் பக்ற்றீரியா, விலங்குகளின் குருதியில் உருவாவதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில், மனிதருக்கு ஏற்படும் தொற்றுநோய்கள் பலவற்றுக்கு பக்ற்றீரியா தொற்றே காரணம் என்பதனை 'ட்ருசோ' என்ற சத்திரசிகிச்சை மருத்துவர் ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் கண்டறிந்திருந்தார். பாஸ்ச்சர் இதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான பரிசோதனைகளை மேற்கொள்ள பலரினதும் உதவியை நாடினார். 1877 இல் அவர் அந்த்ரெக்ஸ் பற்றி அறிந்து கொள்ள ஆரம்பித்தார். அந்த்ரெக்ஸ் வைரஸ் காரணமாக, அந்தக் காலப்பகுதியில் ஆடுகள், பன்றிகள் மற்றும் மாடுகள் என்பன தொற்றுநோய்க்குள்ளாகி இறந்தன. டேவின் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த நோய், பரவக் காரணமான விடயம்பற்றி துரிதகதியில் பாஸ்ச்சரும் புரிந்துகொண்டார். ரசாயன கூடத்தில் அந்த பக்ற்றீரியாவை உருவாக்கிய பாஸ்ச்சர், அந்த்ரெக்ஸ் கிருமிக்கு எதிரான ஒரு மருந்தைக் கண்டுபிடித்து அதனை விலங்குகளுக்கு ஊசி மூலம் ஏற்றினார்.

## விசர்நாய்க்கடி தடுப்பூசி கண்டுபிடிப்பு


இந்த புதிய கண்டுபிடிப்பின் ஊடாக, விசர்நாய்க்கடி நோயைக் கட்டுப்படுத்தும் வாய்ப்பு பாஸ்ச்சருக்குக் கிடைத்தது. விசர்நாய்கள் ஏனைய நாய்களைக் கடிப்பதனால்தான் இந்த நோய் ஏற்படுகின்றது. விசர்த் தன்மை கொண்ட நாய்கள் சிலவேளைகளில் மனிதர்களையும் கடிப்பதனால், மனிதர்களுக்கும் இத்தொற்று ஏற்படுகின்றது. இது பேராபத்து என்பதனை லூயி பாஸ்ச்சர் புரிந்துகொண்டார்.

எனினும், விசர்நாய்க்கடி நோய்க்கான உண்மையான காரணம் என்ன? என்பதை பாஸ்ச்சரால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆயினும், விசர்நாய்களினால் கடிக்கப்பட்ட மனிதர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான தடுப்பு மருந்தினை லூரயி பாஸ்ச்சர் கண்டுபிடித்தார். இந்த தடுப்பு மருந்தினை 1885 ஜூலை 6 ஆம் திகதி முதன்முதலாக ஊசி மூலம் ஏற்றினார். மூன்று தினங்களுக்கு முன்பு விசர்நாயினால் கடிக்கப்பட்ட ஜோசப் மேஸ்டர் என்ற ஒன்பது வயது சிறுவனுக்கே இந்த தடுப்பு மருந்து ஊசி மூலம் முதன் முதலில் ஏற்றப்பட்டது. அதற்கமைய, அந்த சிறுவன் விசர்நாய்க்கடி நோயினால் பாதிக்கப்படவில்லை; இறக்கவும் இல்லை. இதன்படி பாஸ்ச்சரினால் கண்டுபிடிக்கப்பட்ட விசர்நாய்க்கடி தடுப்பு மருந்து வினைத்திறன் மிக்கது என்பது உறுதியானது.

## இறுதிக் காலம்

இந்த அரிய கண்டுபிடிப்பு காரணமாக, பிரான்சிய அரசாங்கம் 1883 இல் 'பாஸ்ச்சர் இன்ஸ்டிடியூட்' என்ற பெயரில் வியப்பூட்டும் ரசாயன கூடத்தினை பாஸ்ச்சருக்காக அமைத்தது. 1895 ஆம் ஆண்டு செப்டெம்பர் 23 ஆம் திகதி இந்த சிறந்த விஞ்ஞானி இயற்கை எய்தினார். அவரது இறுதிக் கிரியை பாஸ்ச்சர் இன்ஸ்டிடியூட்டில் அமைக்கப்பட்ட பகுதி ஒன்றிலேயே இடம்பெற்றது.

பிரியதர்ஷினி



விஞ்ஞான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட 'பாஸ்ச்சர் இன்ஸ்டிடியூட்' ஆய்வுகூடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - II

பெயர்: ...................................  நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

01. பின்வரும் விவரணத்தை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

'எப்போது விடியும்' எனக் கண்விழித்துக் காத்திருந்தபோது கொண்டைச்சேவல், கரிய குயில், காகம் போன்ற பறவைகளின் ஒலியைக் கேட்ட குமார் சில நிமிடங்கள் கழிந்த பின்னர் வெளியில் வந்து வில்லுக்குளத்தைப் பார்க்கிறான். ஆதவனும் கீழ்த்திசையில் தோன்றி விட்டான். கதிரவனின் வரவைக்கண்டு குளத்திலுள்ள செந்தாமரை மலர்கள் முகந்திறந்து தேனைச் சிந்துகின்றன. வயல் அருகிலுள்ள ஓடைகளிலிருந்து நீர் சலசல என பாய்கின்றது. ஆட்டு மந்தைகள் அங்குமிங்கும் அலைந்து இலைகுழைகளை உண்கின்றன. நெற்பயிர்களிடையே காணப்படுகின்ற நெற்சப்பி, கோரை, முள்ளி போன்றவற்றை பெண்கள் பிடுங்குகிறார்கள்.

01. இவ்விவரணத்தில் எக்காட்சி வர்ணிக்கப்படுகின்றது? ..........................................
02. சூரியனைக் குறிக்கும் இரண்டு சொற்கள் எழுதுக? ..........................................
03. எழுவாய் அடைமொழிச் சொற்கள் இரண்டு எழுதுக?..........................................
04. 'செந்தாமரை' என்ற சொல்லைப் பிரித்து எழுதுக? ..........................................
05. இப்பகுதியில் காணப்படும் காலப்பெயர் ஒன்று தருக? ..........................................
06. இங்கு காணப்படும் இணைமொழி ஒன்றினை எழுதுக? ..........................................
07. இங்கு காணப்படும் இரட்டைக்கிளவி ஒன்றை எழுதுக? ..........................................
08. பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொற்களை எழுதுக?
    (அ) வயல் ....................  (ஆ) குளம் ....................
09. இங்கு வாழும் மக்கள் மேற்கொள்ளும் தொழில் யாது? ..........................................
10. இங்கு காணப்படும் களைகள் மூன்று எழுதுக? ..........................................

02. சரியான விடையின்கீழ்க் கோடிடுக.

1. காற்று குளு குளு என்று வீசியது. குளு குளு என்பது;
   (அடைமொழி, இணைமொழி, இரட்டைக்கிளவி)
2. வாழ்க்கை மேடு பள்ளம் நிறைந்தது. மேடு பள்ளம் என்பது;
   (அடைமொழி, இணைமொழி, இரட்டைக்கிளவி)

03. ✱ வெற்றிடத்துக்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து எழுதுக.

1. பரீட்சையில் சித்தியடைந்த நிசாட் .......................................... அடைந்தான்.
   (மகிள்ச்சி/ மகிழ்ச்சி/ மகில்ச்சி)
2. உலகின் தலைசிறந்த .......................................... சோக்ரட்டீஸ்.
   (சிந்தணையாளர்/ சிந்தனையாலர்/சிந்தனையாளர்)

04. சுருக்கக் குறியீடுகள் உணர்த்தும் பொருளை எழுதுக.

(i) இ.ஒ.கூ. ..........................................
(ii) இ.மி.ச. ..........................................

05. மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுக.

(i) காது குத்துதல் ..........................................
(ii) இரண்டுங் கெட்டான் ..........................................

06. பின்வரும் பழமொழியின் கருத்தை எழுதுக.

(i) காகந் திட்டி மாடு சாகாது ..........................................
(ii) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ..........................................

07. ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

(i) மஞ்சள் ..........................................
(ii) தண்ணீர் ..........................................
(iii) அண்ணா ..........................................

08. கருத்தைத் தமிழில் தருக.

(i) Please sit down ..........................................
(ii) I am reading a book ..........................................

09. பின்வரும் ஒவ்வொரு சிங்கள வாக்கியத்தினதும் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) அ(ப்)பி கிரிபத் கமு ..........................................
(ii) ஒயாகே நம மொக்க(dh)த? ..........................................




★ *10 தொடக்கம் 37 வரையுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின்கீழ்க் கோடிடுக.*

10. சித்திரை மாதத்தில் பூக்கும் தாவரம் எது?

1. வேம்பு  2. கொன்றைப் பூ  3. பிறைப் பூ  4. வாகைப் பூ

11. தண்டின்மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம் எது?

1. ஈரப்பலா  2. பொன்னாங்கண்ணி
3. சதைகரைச்சான்  4. சோளம்

12. சூரிய நமஸ்கார செயற்பாடுகளில் ஆறாவது செயற்பாடாக அமைவது



1.  2.  3.  4.

13. தாவரங்களின் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பிராணி எது?

1. நத்தை  2. மயிர்கொட்டி  3. வண்ணத்துப்பூச்சி  4. தேவாங்கு

14. 'ஔடதபானம்' தயாரிக்கப் பயன்படும் பூ எது?

1. பொன்னாவரை  2. அலரி  3. நித்திய கல்யாணி  4. அகத்தி

15. வீட்டில் இயற்கையாகக் காணப்படும் பிராணி எது?

1. கிளி  2. கோழி  3. கரப்பான்  4. பூனை

16. இலங்கை அமைந்துள்ள சமுத்திரம் எது?

1. பசுபிக் சமுத்திரம்  2. இந்து சமுத்திரம்
3. ஆட்டிக் சமுத்திரம்  4. அத்திலாந்திக் சமுத்திரம்

17. தேசிய கொடியில் தமிழ் மக்களைக் குறித்து நிற்கும் நிறம் எது?

1. பச்சை  2. மஞ்சள்  3. செம்மஞ்சள்  4. செந்நிறம்

18. ஜூன், ஜூலை, ஒகஸ்ட் மாதங்களில் மேற்கு வானில் தோன்றும் உடுத்தொகுதி யாது?

1. தென்சிலுவை  2. கார்த்திகை  3. பெருங்கரடி  4. ஓராயன்

19. சூரியனுக்கு மிகவும் அண்மையிலுள்ள கோள் எது?

1. வியாழன்  2. செவ்வாய்  3. புதன்  4. புவி

20. இலங்கை அமைந்திருப்பது இந்தியாவிற்கு எத்திசையில்?

1. வடக்கே  2. மேற்கே  3. கிழக்கே  4. தெற்கே

21. இலங்கையில் காணப்படும் மிகப் பெரிய மலை எது?

1. நக்கில்ஸ் மலை  2. நமுனகுலகந்த மலை
3. சிவனொளிபாத மலை  4. பீதுருதாலகால மலை

22. ஊவா மாகாணத்தின் தலைநகரம் எது?

1. காலி  2. இரத்தினபுரி  3. பதுளை  4. கண்டி

23. குருநாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணம் எது?

1. மேல் மாகாணம்  2. வடமாகாணம்
3. வடமத்திய மாகாணம்  4. வடமேல் மாகாணம்

24. 'களனிகங்கை' கடலுடன் கலக்கும் இடம் எது?

1. திருகோணமலை  2. கொழும்பு
3. அம்பாந்தோட்டை  4. களுத்துறை

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்வி முகாமைத்துவம்

# பாடசாலைக் காலத்தில் புதிய திறமைகளை வளர்த்துக்கொள்ளுங்கள்





கல்வி கற்பது என்பது, சிறந்ததோர் இலக்கை மையப்படுத்தி அதனை அடைவதற்காக, முறையான பயிற்சிகளையும் மற்றும் தேடல்களையும் அறிவைப் பயன்படுத்தி செயன்முறையாக்கிக்கொள்வதே ஆகும்.

கல்வி கற்பதால் நாம் அறிந்திராத பல்வேறு விடயங்களை எமது முயற்சிக்கு ஏற்ப அடைந்துகொள்ளவும் தெரிந்துகொள்ளவும் முடியும். மேலும், கற்பதால் எமக்கு சமூகத்தில் ஓர் அந்தஸ்தும் முன்மாதிரியான நிலையும் கிடைக்கின்றது. இவ்வாறான சிறப்பியல்புடைய கல்வியை அடிப்படையாகக்கொண்டு அதன் இலக்கை அடைவதே ஒவ்வொரு மாணவரதும் லட்சியமாகக் காணப்பட வேண்டும்.

எனினும், அந்தக் கல்வி வெறுமனே ஏட்டுக் கல்வியாக மட்டும் அமையக்கூடாது.மாறாக, இதற்காக எம்மிடையே புதிய விடயங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

அந்தவகையில், சிறந்த ஆளுமையைக் கொண்டுள்ள மாணவரொருவர், தான் கற்ற பெற்ற கல்வியை முதன்மையாகக் கொண்டு எமது திறமைகளையும் ஆற்றல்களையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். வற்றைக்கொண்டு பல விடயங்களில் பல திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதனை சமூகத்தில் பிரயோகம் செய்ய வேண்டும் என்ற ஊக்கத்துடன் செயற்பட வேண்டும். இதுவே அவரது வெற்றிக்கு வழிகாட்டும்.

திறமை என்பது, கடந்தகாலத்தில் அடையப் பெற்றதாகவும் அதுவே நிகழ்காலத்தில் பிரயோகிக்கக் கூடியதாகவும் காணப்பட வேண்டும். இதற்கு சரியான தயாரிப்பு இருக்க வேண்டும். இல்லையேல் சரியானதை சரியாகச் செய்ய முடியாத நிலையை தோற்றுவிக்கும்.



பாடசாலைக் காலத்தில் திறமைகளை வளர்த்துக்கொள்ளும்போதுதான், அவற்றை ஆறுதலாகவும் முறையாகவும் வளர்ச்சியடையச் செய்ய முடியும். ஆகவே, சிறந்த திறமைகளை உருவாக்க முறையான பயிற்சியும் தேடலும் இன்றியமையாததாகும்.

இத்தகைய திறமைகளை நீண்ட முயற்சியின், பயிற்சியின் காரணமாக மட்டுமே படிப்படியாக வளர்ச்சியடையச் செய்யலாம். ஆகவே, அவ்வாறான பெறுமதி வாய்ந்த திறமைகளை பாடசாலைக் காலத்திலிருந்து வளர்த்துக் கொள்வதே நலமானதாகும்.

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

## விண்வெளித் தகவல்கள் - விண்வெளித் தகவல்கள் - விண்வெளித் தகவல்கள்

# விண்கல்லை நகர்த்திச்சென்று எரிபொருள் நிலையமாக பயன்பநத்தத் திட்டம்



விண்வெளியில் சுற்றித்திரியும் ராட்சத விண்கல்லொன்றை நகர்த்திச் சென்று, சர்வதேச விண்வெளி ஆய்வுகூடத்தின் எரிபொருள் நிலையமாகப் பயன்படுத்த அமெரிக்க விண்வெளி நிலையமான நாஸா திட்டமிட்டுள்ளது.

பூமிக்கும் நிலவுக்கும் இடையே தான் இந்த பிரமாண்டமான விண்கல் அமைந்துள்ளது. இந்நிலையில், விண்ணில் சுற்றித் திரியும் அந்த விண்கல்லை அற்லஸ் 5 ரொக்கெட் மூலம் இழுத்துச் செல்லத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக, அந்த விண்கல்லைப் பிடிக்கக்கூடிய வகையில் கூண்டு போன்ற அமைப்பொன்றை உருவாக்கி குறித்த ரொக்கெட்டுடன் சேர்த்து அனுப்பப்படவுள்ளது. அது விண்கல்லைப் பிடித்து அப்படியே இழுத்துச் சென்று சர்வதேச விண்வெளி மையம் அருகே நிலைநிறுத்தும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இன்னும் 10 முதல் 12 ஆண்டுகளுக்குள் இத்திட்டத்தை நிறைவேற்ற முடியும் என நாஸா தெரிவித்துள்ளது.




செவ்வாய்க் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்பி ஆய்வுகளை நடத்த முடிவு செய்துள்ள அமெரிக்கா, செவ்வாய் செல்லும் வழியில் சர்வதேச விண்வெளி ஆய்வுகூடத்தில் எரிபொருளை நிரப்பிச் செல்லத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான எரிபொருள் நிலையமாகவே 5 லட்சம் கிலோ எடையுள்ள இந்த விண்கல்லைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

# நமது பால்வெளியில் பூமியை ஒத்த கோள்கள் ஏராளம்!

நமது பால்வெளியில் பூமியை ஒத்ததாக பில்லியன் கணக்கிலான கோள்கள் இருப்பதற்கான ஆதாரங்களை கெப்லர் விண் தொலைநோக்கி கண்டுபிடித்துள்ளதாக வானியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, நாஸாவின் கெப்லர் தொலைநோக்கி மேலும் 461 கோள்களைக் கண்டுபிடித்துள்ளதாக வானியலாளர்கள் அறிவித்துள்ளனர். இவற்றில் பெரும்பாலானவை நமது பூமியின் பருமனை



ஒத்தவையாக அல்லது ஒரு சில மடங்கு பெரிதானவையாக உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, நமது பால்வெளியில் (Galaxy) மட்டும் நமது பூமியின் அளவில் சுமார் 17 பில்லியன் கோள்கள் இருக்கலாம் என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக, விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். நமது சூரியனைப் போன்ற அளவு கொண்ட நட்சத்திரங்களை நாஸாவின் கெப்லர் விண்வெளி தொலைநோக்கி ஆராய்ந்து வருகிறது. அப்படிப்பட்ட நட்சத்திரங்களில் ஆறில் ஒன்றில் பூமியின் அளவு கொண்ட கோள்கள் இருப்பதற்கான அறிகுறிகளை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.


2009 ஆம் ஆண்டில் விண்ணுக்கு ஏவப்பட்ட கெப்லர் தொலைநோக்கி, விண்வெளியில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிலைகொண்டு ஏறத்தாழ 150,000 விண்மீன்களைத் தனது காட்சிப் புலத்தில் கண்காணித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிர்கரம்


வழங்குபவர்: ஆசிரியை றோஸ்மலர்



இவ்வுருவில் காணப்படும் நீள் வட்டங்களின் எண்ணிக்கையைக் கண்டறிந்து நிறந்தீட்டுக.



புள்ளிக்கோடுகளை இணைத்து உருக்களை அறிந்து வர்ணமிடுக.



இங்கு காணப்படும் உரு வரிசையில் அடுத்து வரக்கூடிய உரு எது என்பதை வரைந்து காட்டுங்கள்.



மெலிந்த தோற்ற முடைய கரடிக்கு சாம்பல் நிறத்தையும் தடித்த கரடிக்கு கபில நிறத்தையும் தீட்டுக.

## தொடர்பாடல் உருவப்பதிவுகள்

மொழியின் தோற்றத்திற்கு முன்னர் சைகைகள், உடல் அசைவுகளால் கருத்தைப் புலப்படுத்திய மனிதன் முதலாவது பதிவாக உருவப்பதிவுகளை மேற்கொண்டான். சிற்பம், ஓவியம், சித்திரம் ஆகியன உருவப்பதிவுகளுக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன. எழுத்துக்கள் அறிமுகம் செய்யப்படும் வரை சித்திரங்கள், ஓவியங்கள் முக்கியம் பெற்றிருந்தன.

எழுத்து வடிவத்தின் முதல்படி ஓவியம் வரைதலும் வர்ணம் தீட்டுதலும் ஆகும். ஓவியம் வரைதல் முதலாவது பதிவு முறையாக சுட்டிக்காட்டப்படுகின்றது. ஓவியங்கள் வரைவதற்கு கல், துணி, தூண், மரம், கண்ணாடி போன்றன பயன்படுத்தப்பட்டன. சைகைகள், அங்க அசைவுகள் நேருக்கு நேர் முறையில் இடம்பெறும் தொடர்பாடலுக்குப் பொருத்தமானதாக அமைந்திருந்தது. ஆனால், ஒரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு செல்கின்ற போது அல்லது எதிர்கால சமூகத்திற்கு செய்தியை கடத்துவதற்கு 'வரைந்து வைத்தல்' நுட்பம் பயன் படுத்தப்பட்டது. இவற்றின் மேற்பரப்பை வழவழப்பாக்குவதற்கு ஒட்டுப்பசை, எண்ணெய், மெழுகு, மரக் கலவை பயன்படுத்தப்பட்டன. ஓவியங்கள் கலப்பு கட்டமைப் [illegible] ன.





## தொடர்பாடல் எழுத்து மொழி

ஆதி சமூகத்தில் தொடர்பாடலுக்காக சித்திர எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. களிமண் பதிவுகள் அனைத்திலும் சித்திர எழுத்துக்களே காணப்பட்டன. பைபிரஸ், தோல், மரம் என்பவற்றிலும் சித்திர எழுத்துப்பதிவுகளை மேற்கொண்டிருந்தனர். பாறைமேல் செதுக்கப்பட்டவை 'பாறை செதுக்கல் சித்திரம்' எனவும், பாறைகளில் வண்ணத்தால் வரையப்பட்டவை 'பாறைச்சித்திரம்' எனவும் அழைக்கப்பட்டன.



புராதனகால சமுதாயத்தில் ஓவியங்களில் உருவ எழுத்துக்கள், பானை ஓடுகளில் உள்ள உருவ எழுத்துக்கள், செப்பு முத்திரையில் உள்ள உருவ எழுத்துக்கள் என எழுத்துமொழி தொடர்பாடல் நிலைமைகளை அவதானிக்க முடிகின்றது. பெபிரஸ், தோல், ஓலைச்சுவடிகள், மரப்பட்டைகள், மெழுகேடு, மூங்கில் சுவடிகள், உலோகத் தகடுகள், துணி போன்றன எழுத்துமொழி சேமிப்பு ஊடகங்களாக அமைந்திருக்கின்றன.

(தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியத்தில் ஆர்வமுள்ளவர்களுக்காக Google Drawing




கூகிள் நிறுவனமானது, தனது பயனர்களுக்காக, தொடர்ந்தும் பல்வேறு புத்தம் புதிய வசதிகளை வழங்கி வருகின்றது. இந்த வரிசையில் தற்போது 'Google Drawing' எனும் வசதியினை அறிமுகப்படுத்தியுள்ளது. அதாவது Document, Presentation, Website போன்றவற்றில் பயன்படுத்தக்கூடிய காவிகளை (Vector) அடிப்படையாகக்கொண்ட உருவங்கள், Chart மற்றும் Diagrams போன்றவற்றினை வரைவதற்கான வசதியைத் தரும் எப்ளிக்கேஷன் நீட்சியாக இதனைக் குறிப்பிடலாம்.


Google Drive உடன் இணைக்கப்பட்டுள்ள இந்த அப்ளிக்கேஷன் ஆனது, வரையப்படும் உருவங்களை இயல்பாகவே சேமித்து வைக்கக்கூடியதாகக் காணப்படுவதுடன், மீண்டும் அவற்றினை எந்தவொரு கணினி சாதனத்திலிருந்தும் பயன்படுத்தக்கூடியவாறும் அமைந்துள்ளது.

மேலும், க்ரோம் உலாவிகளில் நிறுவிப் பயன்படுத்தக்கூடியவாறு உருவாக்கப்பட்டுள்ள இந்த எப்ளிக்கேஷன், பல் பயனர் (Multiple User) இடைமுகத்தினைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பாடும் Shower








உங்களில் எத்தனை பேர் குளிக்கும் போது பாடிக்கொண்டு குளிக்கிறீர்கள்? அல்லது எத்தனை பேர் குளிக்கும் போது, பாட்டுக் கேட்டுக் கொண்டு குளிக்கிறீர்கள்?

இத்தகையவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக Kohler என்ற நிறுவனம் ஒரு தயாரிப்பை அறிமுகம் செய்துள்ளது. இதன் பெயர் 'Kohler Moxie Showerhead' என்பதாகும். இதை உங்கள் வீட்டு Shower இல் பொருத்திக்கொண்டு, தண்ணீரைத் திறந்தவுடன் இனிமையான இசையைக் கேட்கலாம். இதன் விலை 200 அமெரிக்க டொலர்களாகும்.



இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஜனவரி மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விஜய் நுட்பம்

2013, ஜனவரி, 23, புதன்கிழமை

# பிரத்தியேக 3D திரைக்கூடம்







நீங்கள் திரையரங்குகளுக்குச் சென்று 3D கண்ணாடி அணிந்து திரைப்படம் பார்த்த காலம் மறைந்து, இன்று வீட்டிலேயே 3D தொலைக்காட்சி மூலம் திரைப்படம் மற்றும் நிகழ்ச்சிகளைப் பார்க்கும் வசதி வந்துள்ளது. இதன் அடுத்த கட்டமாக Sony நிறுவனம் புதிதாக அறிமுகம் செய்துள்ள Personal 3D Viewer ஆனது, எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் சென்று பார்க்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

இது சாதாரணமாக, தலையில் அணிந்து பார்க்கக்கூடிய வசதியைக் கொண்டுள்ளது. அத்துடன், நீங்கள் கட்டிலில் படுத்துக்கொண்டோ அல்லது உடற்பயிற்சி செய்துகொண்டோ, இதைப் பார்க்கலாம். இதில் சேமித்து வைத்துக்கொண்டு எத்தனை திரைப்படமும் பார்க்கலாம். மற்றும் இதில் பார்க்கும்போது, ஒரு திரையரங்கில் பார்க்கும் திருப்தி ஏற்படும் என sony நிறுவனம் தெரிவித்துள்ளது.

# 2012 இல் உங்கள் வாழ்வின் முக்கிய நிகழ்வுகளைக் காட்டும் facebook

ஃபேஸ்புக் சமூக வலையமைப்பைப் பயன்படுத்துகின்ற ஒவ்வொருவருமே தமக்கு நிகழும் முக்கிய நிகழ்வுகளை ஃபேஸ்புக் நண்பர்களுடன் பகிர்ந்துகொள்கின்றனர். அவ்வாறு ஒவ்வொருவரும் பகிர்ந்துகொண்டவற்றில், 2012 இன் முக்கியமான 20 நிகழ்வுகளை ஒரு Timeline ஆக காட்டுகிறது facebook.

'see your 2012 year in review' என்று பெயரிடப் பட்டிருக்கும் இது, உங்கள் ஃபேஸ்புக் கணக்கில் நீங்கள் பகிர்ந்த முக்கியமான 20 விடயங்களை உங்களுக்கும் உங்கள் நண்பர்களுக்கும் தெரிவிக்கிறது. நீங்கள் ஃபேஸ்புக் கணக்கினூடாக செய்த புதிய வேலை, புதிய உறவு, புதிய நண்பர்கள், நீங்கள் Like செய்தவை, facebook இல் உங்களின் சாதனைகள், அதிகமாகப் பகிரப்பட்ட like செய்யப்பட்ட உங்கள் status மற்றும் உங்கள் profile படம் போன்றவற்றை இதில் காணலாம். இதனைக் காண்பதற்கு ஒரு புதிய Tab இனூடாக உங்கள் ஃபேஸ்புக் கணக்கில் நுழைந்து கொள்ளுங்கள். பின் அதன் கீழே உள்ள படத்தின் மீது க்ளிக் செய்யுங்கள்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-இங்கே வெட்டவும்-




# தமிழ் புத்தகங்களை இணையத்தில் படித்திட...




'ஓ பன் ரீடிங் புக்' என்னும் இந்த இணையத்தளம் தமிழில் புத்தகங்களை ebook வடிவில் இலவசமாகப் படிக்க உதவுகிறது.

முகப்புப் பக்கத்தில் வலைப்பதிவு வடிவில் வரிசையாகப் புத்தகங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. எந்தப் புத்தகம் தேவையோ, அதனைக் க்ளிக் செய்து படிக்கத் தொடங்கி விடலாம்.

Openreadingroom
A wealth of Indian literature online

அவ்வாறு படிக்கும்போது, அருகிலேயே ஏனைய புத்தகங்கள் அவற்றின் வகைகளுக்கு ஏற்ப தொகுக்கப்பட்டுள்ளன. அரசியல், இலக்கியம், உடல் நலம், இசை என புத்தகங்களின் வகைப்படுத்தல் பட்டியல் நீள்கிறது.

நாட்டுப்புற இலக்கியம், நாவல்கள், பயண இலக்கியம் என பல வகையான புத்தகங்களும் இருக்கின்றன. அண்மைக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இத்தளம், குறுகிய காலத்திலேயே பலரையும் கவர்ந்துள்ளது. தற்போதளவில் இதில் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்துள்ளது.


இந்த தளத்தை சிங்கப்பூரைச் சேர்ந்த தமிழ் ஆர்வலரும் பத்திரிகையாளருமான ரமேஷ் சக்ரபாணி என்பவரே நடத்தி வருகிறார். ஓர் இலவச இணைய நூலகமாகவே அவர் இதனைக் குறிப்பிடுகிறார். இதன் இணையத்தள முகவரி http://www.openreadingroom.com/ என்பதாகும்.






# Double Click செய்வதற்கு உதவும் Mouse Button Control






தற்போது பாவனையிலுள்ள கணினி Mouse- கள் பொதுவாக மூன்று பொத்தான்களைக் கொண்டுள்ளன. இவற்றில் இடதுபுறமுள்ள பொத்தானைப் பயன்படுத்தி Double Click செய்ய வேண்டிய தருணங்களில் நேர விரயம் ஏற்படும்.

இதனைத் தவிர்த்து மத்தியில் காணப்படும் பொத்தானை (Middle Mouse Button) ஒருமுறை அழுத்துவதன்மூலம் Double Click செயற்பாடு கொண்டதாக மாற்றியமைப்பதற்கு Mouse Button Control எனும் மென்பொருள் தற்போது உதவிபுரிகின்றது.




# Polaroid இன் Android நிழற்படக் கெமரா




Polaroid நிறுவனமானது, Android இயங்குதளத்தினை அடிப்படையாகக்கொண்ட Polaroid IM 1836 எனும் கெமராவினை அறிமுகப்படுத்தியுள்ளது.

18.1 Megapixel Sensor இனைக் கொண்டதாகக் காணப்படும் இக்கெமராவானது, 3.5 அங்குல அளவுடைய தொடுதிரை வசதியினையும் உள்ளடக்கியுள்ளது.

அத்துடன், வயர்லெஸ் தொழில்நுட்பமான Wi-Fi இனையும் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே வெட்டவும்

# புகைப்படங்களுக்கு குறிப்பெழுத வேண்டுமா?

## இதோ ஓர் இணையத்தளம்




புகைப்படம் என்றாலே, அதற்கான விளக்கக் குறிப்புடன் இருந்தால்தான் பயனுள்ளதாக இருக்கும். புகைப்படம் எதைக் குறிக்கிறது?, எங்கே எடுக்கப்பட்டது? போன்ற விபரங்களைத் தெரியப்படுத்த விளக்கக் குறிப்புகள் மிகவும் அவசியம். இவ்வாறான புகைப்படங்களுக்கு இஷ்டம் போல விளக்கக் குறிப்புகளை இடம்பெற வைக்க உதவுவதுதான் 'சோட்டர்' இணையத்தளம்.

பொதுவாக, விளக்கக் குறிப்புகளை புகைப்படத்தின் கீழே சில வரிகளாக இடம்பெற வைக்கலாம். பத்திரிகைகளிலும் இணையத்திலும் இத்தகைய குறிப்புகளைத்தான் அதிகம் பார்க்கலாம். ஆனால், சோட்டர் இணையத்தளம் ஆனது, புகைப்படத்தின் எந்தப் பகுதியை வேண்டுமானாலும் அழகாக சுட்டிக்காட்டி, அதன் அருகே பொருத்தமான குறிப்புகளை இடம்பெறச் செய்ய உதவுகிறது.

எந்தப் புகைப்படத்திற்கு குறிப்புகள் தேவையோ அதனை இத்தளத்தில் பதிவேற்றி, பின்னர் அதில் தேவையான பகுதியை வட்டமிட்டு அல்லது சதுர வடிவில் சுட்டிக்காட்டி, அதில் குறிப்பெழுதலாம். குறிப்பிட்ட இடத்தில் அம்புக்குறியையும் தோன்றச் செய்யலாம். சுட்டிக்காட்டும் பகுதிக்கான நிறத்தைக்கூட, நாமே தேர்வு செய்துகொள்ளலாம். தேவை என்றால், புகைப்படம் மீது வரையவும் செய்யலாம்.

புகைப்படத்திற்கான குறிப்புகளை பூர்த்திசெய்த பின் அதனை அப்படியே சேமித்து வைத்துக் கொள்வதோடு, நண்பர்களோடு ஃபேஸ்புக், டுவிட்டர் மூலம் பகிர்ந்தும்கொள்ளலாம். புகைப்படங்களை கூடுதல் தகவல்களோடு பகிர்ந்துகொள்ளவேண்டும் என விரும்புகிறவர்களுக்கு இந்த இணையத்தளம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

http://szoter.com/#intro என்பதே இதற்கான இணையத்தள முகவரியாகும்.

# மாற்று இணையத்தளங்களைத் தேடி அறிந்திட...

ஒரே மாதிரியான இணையத்தளங்களைத் தேட உதவும் இணையத்தளங்கள் ஏராளம் இருக்கின்றன. இந்த வரிசையில் புதிதாக அறிமுகமாகியுள்ள தளம்தான் websiteslike இணையத்தளம்.

குறிப்பிட்ட ஓர் இணையத்தளத்தை இதன் தேடல் கட்டத்தில் சமர்ப்பித்தால், அந்த தளம் போலவே உள்ள ஏனைய இணையத்தளங்களை இது தேடித்தருகிறது. சுமார் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட தளங்களுக்கான மாற்று இணையத்தளங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதாகக் கூறப்படும் இத்தளம், ஒரே மாதிரியான தளங்களைத் தேடித்தரும் ஏனைய இணையத்தளங்களை விடவும் துல்லியமான முடிவுகளைத் தருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேவையான மாற்றுத் தளங்களைத் தேடிப்பார்ப்பதோடு, இங்கு ஏற்கனவே தேடிய தளங்களையும் பார்த்துக்கொள்ளலாம். அத்துடன், இதுவரை தேடப்பட்ட தளங்களின் பட்டியலையும் பார்க்கலாம். இதற்கான இணையத்தள முகவரி http://www.websiteslike.org/ என்பதாகும்.



# Coca-Cola மூலம் செயற்படும் கைப்பேசி

Daizi Zheng என்ற பிரபல வடிவமைப்பாளர் Nokia கைப்பேசி ஒன்றை Coca-Cola மூலம் இயங்கக்கூடியவாறு வடிவமைத்துள்ளார். இதற்கு அவர் 'Nokia Green Phone' என்று பெயரிட்டுள்ளார்.





இக்கைப்பேசிக்குத் தேவைப்படும் மின்சக்தி Carbohydrate மூலம் உற்பத்தியாக்கப்படுகிறது. இக்கைப்பேசியானது, எந்தவித மாசுக்களையும் ஏற்படுத்தாது என்றும் கூறப்படுகின்றது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த கைப்பேசியின் Battery ஆனது, சாதாரண Battery யைவிட 3 தொடக்கம் 4 மடங்கு அதிகமாக செயற்படக் கூடியது என்று Daizi குறிப்பிடுகின்றார்.

# கணினி ஐயங்கள்



**❋❋ கணினியில் உள்ள Video Card இன் கொள்ளளவை எவ்வாறு தெரிந்துகொள்வது?**

வீடியோ கார்ட்/கிரஃபிக் கார்ட்டின் கொள்ளளவை தெரிந்துகொள்வதற்கான இலகுவான வழி Direct X விண்டோவிற்கு செல்வதேயாகும். இதற்கு கீபோர்டில் விண்டோஸ் லட்சினையைக் கொண்ட Key ஐ அழுத்திக்கொண்டு R எனும் Key ஐ அழுத்துதல் வேண்டும். இதன்போது, தோன்றுகின்ற Run டயலொக் பொக்ஸினுள் Dxdiog என்பதைக் குறிப்பிட்டு, Ok செய்யவும். இதன் பின்னர் தோன்றுகின்ற Direct X விண்டோஸின் Display tab ஐ க்ளிக் செய்தவுடன் வீடியோ கார்டின் (கிரஃபிக் கார்ட்) கொள்ளளவை அது சுட்டிநிற்கும்.

**❋❋ de-buggers என்று குறிப்பிடுவது எதனை?**

கணினிக்கென வடிவமைக்கப்படும் ப்ரோக்ரேம்களில் ஏதேனும் தவறுகள், பொருந்தாமைகள் இருப்பின் அவற்றைக் கணினி காட்டி நிற்கும். இவ்வாறான தவறுகளைக் காட்டி நிற்பதே பக்ஸ் (bugs) எனப்படுகின்றது.

கணினி ப்ரோக்ரேம் ஒன்றில் 'பக்ஸ்' (bugs) எனப்படும் கோளாறு அல்லது தவறு ஏதேனும் காட்டப்பட்டால், அத்தவறுக்குரிய காரணத்தைக் கண்டறிவது இலகுவானதல்ல. எனவே, இதற்கென்றே விசேடமான கணினி ப்ரோக்ரேம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வாறான தவறுகளைக் கொண்டுள்ள 'பக்ஸ்' களை இனங்காணவென உருவாக்கப்பட்டுள்ள ப்ரோக்ரேம்களே 'டீ-பகர்ஸ்' (de-buggers) என்று அழைக்கப்படுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் 2013, ஜனவரி, 23, புதன்கிழமை V

# பயனில்லை என்றாலும் புறக்கணிக்க முடியாத தளங்களை இங்கே பார்த்திடலாம்!




இணையத்தளங்கள் என்றதும், பொதுவாகப் பயனுள்ள இணையத்தளங்களையே நாம் பார்ப்பதுண்டு. அவ்வாறே, பயனில்லாத தளங்களைப் பற்றி நாம் அக்கறை கொள்வதில்லை. ஏனெனில், இவை விளம்பரம்மூலம் வருவாய் ஈட்டும் நோக்கத்தோடு, நமக்குப் பயன்படாத தகவல்களையே வழங்கிக்கொண்டிருக்கும். இந்த வகைத் தளங்களை 'பயனில்லாத தளங்கள்' என்று குறிப்பிடலாம் என்றாலும், பயனில்லாத தளங்களுக்கிடையே சுவாரஸ்யமான தளங்களும் இருக்கின்றன. புறக்கணித்துவிட முடியாமலும் எந்தவித பயனை அளிக்காமலும் இருக்கும். இவை, ஏதோ ஒரு சின்ன நோக்கம் அல்லது விடயத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும். ஆக, அந்த நோக்கம்தான் இந்த தளங்களை சுவாரஸ்யம் மிக்கதாக மாற்றிவிடுகிறது.






இந்த வகைத் தளங்களில் ஒன்றுதான் ducksarethebest என்ற தளம். இந்த தளத்தில் நுழைந்தால், அழகான மஞ்சள் நிற வாத்துக்கள் ஒரு கோடு போல வரிசையாகத் தோன்றும். பின்னர் அந்த வாத்துக்கள் வரிசையின் சித்திரம் லேசாக மாறிக்கொண்டே இருக்கும். அவ்வளவுதான் இந்த தளம்.

இது போன்ற மற்றொரு தளம்தான் omfgDOGS என்ற தளம். பெயருக் கேற்ப இந்த தளத்தில் பலவித நாய்க்குட்டிகள் குதித்து ஓடிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

அவ்வாறே, கார்ட்டூன் நாயக னான ஹீ-மேன் சிரிப்பைக் காண்ப தற்கென்றும் ஓர் இணையத்தளம் இருக்கிறது. 'ஹேயாயாயாயா' என்று வினோதமாக அதற்குப் பெயரிடப் பட்டுள்ளது.

fallingfalling என்று இன்னொரு தளம் இருக்கிறது. இதில் நுழைந் தால், திரையில் பல வண்ண வடிவங்கள் சரிந்து விழுந்துகொண் டிருப்பதைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம். வண்ணங்கள் மாறி- வடிவங்கள் மாறி- அவை விழுந்து கொண்டே இருப்பது லேசான மயக்கத்தைத் தரலாம் என்றாலும் இதுவொரு சுவாரஸ்யமான அனுபவம்தான்.

இவ்வாறு எந்தவொரு பயனும் இல்லாத, ஆனாலும் சுவாரஸ்யமாக விளங்கக்கூடிய இணையத்தளங்கள் அநேகம் இருக்கின்றன. இந்த தளங் களை எல்லாம் பட்டியலிடுவதற்கு என்றே ஓர் இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த தளத்தின் பெயர் 'theuselessweb' என்பதாகும்.

இந்த தளத்தின் உள்ளடக்கம் எளிமையாகவும் சுவாரஸ்யமாக வும் இருக்கிறது. இதில் எந்த பட்டியலும் கிடையாது. முகப்புப் பக்கத்தில் 'தயவுசெய்து பயனில் லாத தளத்திற்கு அழைத்து செல் லவும்' என்ற வாசகம் வரவேற் கிறது. அந்த வாசகத்தில் க்ளிக் செய்தால், ஏதாவது ஒரு பயனில்லாத தளத்திற்கு உங்களை அழைத்து செல்லும். மாறி மாறி க்ளிக் செய்துகொண்டிருந்தால், வரிசை யாக பயனில்லாத தளங்களைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம். டிம் ஹால்மன் என்பவர் இந்த தளத்தை உருவாக்கியுள்ளார். இதற்கான இணையத்தள முகவரி http://www. theuselessweb. com/ என்பதாகும்.



## Google Drive இல் சேமிக்க 'Add-on'



கூகிள் வழங்கும் பல சேவை களில் ஒன்று Google Drive. நீங்கள் ஓர் இணையப் பக்கத்தை நேர டியாக Google Drive இல் சேமிக்க விரும்புகிறீர்களா? அல்லது ஒரு படத்தை அல்லது ஒலி/ஒளிக் கோப்பு களை Google Drive இல் சேமிக்க விரும்புகிறீர்களா? save to google drive என்ற Chrome add-on இதற்கு உதவுகிறது.

உதாரணமாக: ஒரு படத்தை Google Drive இல் சேமிக்க விரும்பினால், அந்தப் படத்தில் வலது க்ளிக் செய்து save image to google drive என்ற கட்டளையைச் செயற்படுத்துவதனூடாக, இதனைச் சாத்தியமாக்கிக் கொள்ளலாம்.

## கணினி ஐயங்கள்



தரவுகள் சேமிக் கப்பட்டிருக்கும் ஹார்ட் டிஸ்க் (hard disk) ஐ, கணினி தொடர்பிலி ருந்து கழற்றி வைத்தால் குறித்த ஹார்ட் டிஸ்க்கிற்கோ அதிலுள்ள தரவுகளுக்கோ ஏதும் பாதிப்புக்கள் ஏற்படுமா?

சாதாரண நிலையில் தரவுகள் சேமிக்கப்பட்டுள்ள ஹார்ட் டிஸ்க்கினை கழற்றி வைப்பதால் எந்தவொரு பாதிப்பும் நேராது. ஆனால், வெளிப்புறமாக ஏற்படக் கூடிய பாதிப்புக்களிலிருந்து காத்துக் கொள்ளவேண்டியது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாக்காலி நாயான 'யுகி' வெள்ளித்திரையில்!

யுகி என்ற பெயரைக் கேட்டவுடன் உலக மக்கள் அறிந்துகொள்ளும் பிரபல்யம் பெற்ற இந்த நாய் ஹொலிவூட் திரை உலகை வெற்றிகொண்ட ஒரு நடிகனாகும். 'தி ஆர்டிஸ்ட்' எனும் திரைப்படம் ஒஸ்கார் விருது பெற்றவுடன், அதில் பிரதான வேடம் ஏற்று நடித்த ஜீன் டுஜார்டின் பற்றி எவரும் பேசவில்லை. மாறாக; அத்திரைப் படத்தில் நடிப்பாற்றலை வெளிக்காட்டிய ஜெக் டெரியர்' இன நாயான 'யுகி' உலகம் முழுவதும் ஒரே இரவில் பிரபல்யம் பெற்று ஹொலிவுட்டின் சிறந்த நடிகன் என்ற அந்தஸ்தினைப் பெற்றுக்கொண்டது.




செல்லமாக மிதிப்பது தொடக்கம் இறந்தது போன்று நடிப்பது போன்ற சகல தந்திரங்களிலும் அதி திறமை பெற்ற நாயாக இந்த நாய் உள்ளது. ரொபர்ட் பெற்றின்சனுடன் நடித்த 'வோட்டர் போர் எலிஃபன்ட்ஸ்' என்ற நாடகம் மிகவும் பிரபல்யம் பெற்றிருந்தாலும், 'தி ஆர்டிஸ்ட்' திரைப் படத்தினூடாகவே 'யுகி' அனைவரினதும் கவனத்தினையும் ஈர்த்தது. ஹொலிவூட் நட்சத்திரங்களை நினைவுகூரும் குறிப்புகள் உள்ள 'ஹொலிவூட் வோக் ஒஃப் பேமி' யில் தனது கால் அடையாளத்தைப் பதித்த பெருமை இந்த யுகியையே சாரும்.

சிறிய தோற்றம் கொண்ட நாயாக இருந்தாலும் யுகிக்கு இப்பொழுது பத்து வயதாகின்றது. இந்த ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் சுகவீனம் காரணமாக, யுகி நடிப்புத்துறையிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டது. நரம்புகளில் ஏற்பட்ட நோய் காரணமாக, யுகிக்கு உடலில் நடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால், 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் யுகி நடிப்புத்துறையில் இருந்து விலகிக் கொண்டது.

அத்துடன், யுகி தனது வாழ்க்கையை சுயசரிதைப் புத்தகமாக அண்மையில் வெளியிட்டுள்ளது. பிரித்தானிய பெண் ஊடகவியலாளரான வென்டி ஹோல்டபன் என்பவர் இந்த சுயசரிதையை எழுதியுள்ளார்.

'யுகி த ஆர்டிஸ்ட் எனது கதை (மை ஸ்டோரி)' என்ற இந்த சுயசரிதை நூல் அண்மையில் லண்டன், 'கென்சிங்டன் வோட்டர் ஸ்டோன்ஸ்' நூல் நிலையத்தில் வெளியிடப்பட்டது. இதன் போது தமது விருப்பத்திற்குரிய நாய் நடிகனைப் பார்ப்பதற்குப் பெரும் திரளானோர் நூல் நிலையத்தின் முன் திரண்டிருந்தனர். தமது செல்லப்பிராணிகளையும் யுகியைக் காண்பிப்பதற்காக அவர்கள் அழைத்து வந்திருந்தனர். ரசிகர்கள் முன்பு தோன்றிய யுகி, தனது நூலின் முதல் பக்கத்தில் ஒப்பம் இடவும் மறக்கவில்லை. பேனாவில் ஒப்பம் இட முடியாத போதிலும், கால் விரலினால் அடையாளம் இடுவது யுகிக்கு கடினமானதாக இருக்கவில்லை.

வீதியில் அநாதரவாக விடப்பட்ட யுகியை நாய்கள் பயிற்றுவிப்பாளரான ஓமார் வோன் முல்லர் கண்டெடுத்தமை முதல் பிரபல்யமான ஹொலிவுட் திரை நட்சத்திரமாக மாறியது வரையிலான விபரங்கள் இந்த நூலில் உள்ளடங்குகின்றன. யுகியின் சுயசரிதை நூல் மனிதர்களுக்கு நல்ல படிப்பினைகளைக் கொடுக்கும் என நூலின் ஆசிரியர் கூறுகின்றார்.

யுகியின் வாழ்க்கையை மாற்றுவதற்கு உதவிய ஓமார், யுகிக்கு தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள மறக்கவில்லை. ஏனெனில், தனது வாழ்க்கையை மாற்ற யுகியின் பங்களிப்பு உதவியதாக அவர் கூறினார். ''யுகி நிறைய விடயங்களை உலகில் பெற்றிருக்கின்றது. ஆனால், உலகெங்கிலும் யுகியை போன்று பல நாய்கள் அநாதரவாகக் கைவிடப்பட்டுள்ளன. அந்த நாய்களை கருணையுடன் கவனித்து வளர்ப்பதன் ஊடாக, அவர்களாலும் இவ்வாறான விடயங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்'' என்று அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

-வசந்தி

# விஜய் மாணவர் கழகம்


அங். இல: 4938

சி.காயத்ரி, லோஜிகிறசர், வவுனியா.


அங். இல: 4939

க.சஜன், களுபோவிலை, தெஹிவளை.


அங். இல: 4940

எஃப்.நஸ்ஹா ஹம்ஸா, மஹா ஹீனட்டியங்கள, களுத்துறை-தெற்கு.


அங். இல: 4941

ஜி.சினுஷிகா, மரவளை வீதி, இரத்தினபுரி.


அங். இல: 4942

அஸ்லிப் அஹமட், ஜிலானிய வீதி, சம்மாந்துறை.


அங். இல: 4943

எஸ்.எம்.இபாஸ், நெசவு நிலைய வீதி, நிந்தவூர்-19.


அங். இல: 4944

எம்.ஃபஸீம், தம்பில்லாவ, கள்எலிய.


அங். இல: 4945

ப.மிதூசன், கரணவாய் கிழக்கு. கரவெட்டி.


அங். இல: 4946


எம்.எப்.நஸ்றன், ஹபுரத, குருத்தலாவ.


அங். இல: 4947

ஜே.காயத்ரி, கிரேண்ட்பாஸ், கொழும்பு-14.

# மாணவர்களின் நடத்தைப் பிறழ்வுக்கான காரணம்

பாடசாலைகளில் ஒழுக்கம் குன்றிய மாணவர்கள் சிலர் இருப்பர். அவர்களது நடத்தை (Behaviour) ஆசிரியர்களுக்கும், பெற்றோருக்கும் தொந்தரவாகவும் கவலையளிப்பதாகவும் இருக்கும். இத்தகைய பிரச்சினைக்குரிய நடத்தைகள் (Problem Behavior) பல வடிவங்களில் வெளிப்படலாம். வகுப்புக்குச் செல்லாமை (Truancy), பிற குழந்தைகளைக் கொடுமைப்படுத்தல் (Bullying), திருடுதல் (Stealing), பிறர் உடைமைகளை உடைத்தல்





(Destructiveness) முதலியன சாதாரணமாகப் பாடசாலை மாணவர்களிடம் நாம் காணும் பிரச்சினைக்குரிய நடத்தைகளாகும். தனது எண்ணங்களிலேயே மூழ்கியிருத்தல், பகற்கனவு காணல், காரணமின்றிக் கவலைப்படல், முடிவெடுக்கும் மனவுறுதியின்மை (Procrastination), பிடிவாதம், கீழ்ப்படியாமை போன்றனவும் பிரச்சினை நடத்தைகளேயாகும். சிறுவர்களின் வாழ்க்கையில் நடக்கும் பல சம்பவங்களே, இவ்வாறான மனப் போராட்டங்களைத் தோற்றுவிக்கின்றன.

இப்போராட்டங்களை மனதில் கொண்ட மாணவர்கள், அவற்றைத் தீர்க்க முடியாமல் சிறிது சிறிதாக மனதில் நனவிலி நிலைக்கு அவற்றைக் கொண்டு செல்கின்றனர். அந்நிலையிலிருந்து அவை பொருத்தப்பாடின்மையைக், காட்டும் செயல்களாக வெளிப்படுகின்றன.

இப்பொருத்தப்பாடின்மையே பல தீய நடத்தைகளாக இம்மாணவர்களது வாழ்வில் தோன்றுகின்றன. மனப்போராட்டங்கள் நனவிலி நிலைக்கு கொண்டுசெல்லப்படுவதால் அவை தம்முள் இருந்தும் தம் நடத்தையைத் தூண்டுவதை இம்மாணவர்கள் பொதுவாக உணர்வதில்லை.

கட்டுப்பாடு, சுதந்திரம் ஆகியன பற்றி ஒரு குழந்தை பெற்றுள்ள மனப்பான்மை, பாடசாலையில் சேருமுன் குடும்பத்தில் அக்குழந்தை பெற்ற பயிற்சியின் தன்மை, அளவு ஆகியவற்றைப் பொறுத்ததாகும்.

''பாடசாலைச் சூழல் மாணவர்களைச் சில சந்தர்ப்பங்களில் வழிதவற வைக்கக்கூடும். பாடசாலையின் கட்டுப்பாடின்மை மாணவர்களது வளர்ச்சியின் ஒழுங்கைக் கெடுக்கும். ஆகவே, மாணவர்களின் மனப் போராட்டங்களுக்கும் பொருத்தப்பாட்டின்மைக்கும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளது. இக்காரணங்களே பிரச்சினை நடத்தைக்கான அடிப்படைகளாகும்.

தொகுப்பு: **றினோஸ் ஹனீபா**
PgDPCS (UoC), LLB (Lon), BSW (NISD)


*SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் பேச வேண்டுமா?*

*உங்கள் Dialog தொலைபேசியில் தமிழ் மூலம் SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்றுக்கொள்ளவும் மேலும் முக்கிய செய்திகள், கல்வி, வாழ்க்கை வழிகாட்டல்கள், Tips (தகவல் தொழில்நுட்ப துளிகள்), பொது அறிவுத் தகவல்கள், இலங்கையின் அடிப்படைச் சட்டங்கள், மருத்துவ மற்றும் ஆரோக்கியத் துணுக்குகள், அரச வேலைவாய்ப்புகள் என இன்னும் பல்வேறுபட்ட விடயங்களைப் பெற்றுக் கொள்ள அருகில் காட்டப்பட்டவாறு செயற்படுத்தவும்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுவாவுக்காக விதிக்கப்பட்ட நிபந்தனைகள்

கிராமத்தலைவர்களுக்கு அன்று காணிகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கப் படுவதை ஆள்பதி நோத் அவர்கள் நிறுத்தினார். அதற்குப் பதிலாக அரசாங்கத்தின் மூலம் பணம் வழங்க ஆலோசனை வழங்கினார்.

பிரித்தானிய அரசு, கிழக்கிந்திய வர்த்தக சங்கத்திடம் இருந்த பிரதேசங்களைப் பொறுப்பெடுத்தாலும் கறுவா வர்த்தகம் தொடர்ந்தும் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்திடம் இருந்தது. பிரித்தானிய குடியேற்ற அரசு ஆண்டுதோறும் நான்கு லட்சம் இறாத்தல் கறுவாவை கிழக்கிந்திய வர்த்தக சங்கத்திற்கு வழங்க வேண்டும். அதற்காக, வர்த்தக சங்கம் அறுபதாயிரம் தங்கப் பவுண்களை அரசுக்கு வழங்கும் நிபந்தனைக்கு இணங்கினர். அரசு மேலும் ஒரு ஆலோசனையை கொண்டுவந்தது. அதாவது கறுவா வர்த்தகத்தில் கிடைக்கும் இலாபத்தில் நூற்றுக்கு ஐந்து வீதத்தை வர்த்தக சங்கத்திற்கு வழங்க வேண்டும். அதைவிட மேலதிகமாகக் கிடைக்கும் இலாபத்தை அரசிற்கும் வழங்க வேண்டும். இந்த நிபந்தனைகளை வர்த்தக சங்கம் விரும்பி ஏற்றுக்கொண்டது.

இவ்வாறே நிபந்தனையொன்றையும் முன்வைத்தனர். அதாவது இலங்கையில் விளையும் கறுவாவை கறுவா சங்கத்தைத் தவிர வேறு எவருக்கும் விற்கமுடியாது. அவ்வாறே, வர்த்தக சங்கத்தின் பணிப் பாளர் நிராகரிக்கும் ஏதாவதொரு அளவு கறுவாவை இந்தியாவிற்கோ, நன்னம்பிக்கை முனையின் கிழக்கே அமைந் துள்ள நாடுகளுக்கோ விற்பதற்கு உள்ள உரிமை அரசிற்கு உண்டு. அதன் விலையானது, ஒரு இறாத்தல் ஒன்றே முக்கால் ரிக்ஸ் டொலரிலும் குறைவாக இருக்கக்கூடாது. இத்தகைய நிபந்தனைகளுடன் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கம் கறுவாவை விலைக்கு வாங் கினாலும் கறுவாவின் விலையை ஓர் ஸ்திரமான நிலையில் வைத்துக் கொள்வதில் அவர்கள் தோல்வி அடைந்தனர். அதனால் வர்த்தக சங்கம் ஓர் இக்கட்டான நிலைமைக்கு முகம் கொடுத்து நட்டத்தை சந்தித்தது. அதனால் அரசிற்கு பணத்திற்குப் பதிலாக மேலும் ஐம்பதாயிரம் இறாத்தல் கறுவாவை வழங்க அவர்கள் அனுமதி கேட்டனர். அரசும் அதனை விரும்பியது. இவ்வாறு கி.பி.1810 ஆம் ஆண்டுவரை காரியங்கள் நடந்தேறின.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகின் பிரபலமானவர்கள்

* 'குடிசைவாசிகளின் புனிதர்' என அழைக்கப்படுபவர்?
  அன்னை தெரேஸா
* 'இனிய தோழர்' என அழைக்கப்பட்டவர்,
  லெனின் (ரஷ்யா)
* 'கறுப்பு முத்து' என அழைக்கப்பட்டவர்?
  பேலே (முன்னாள் உலகக் கால்பந்தாட்ட வீரர்)
* 'சிறுகதை மன்னன்' என அழைக்கப்படுபவர்?
  புதுமைப்பித்தன்.
* 'இரும்பு மனிதர்' என அழைக்கப்படுபவர்?
  பிஸ்மார்ச்

எஸ்.எஃப்.மின்ஹா,
மதீனா தே.பாட.,
மடவளை பஸார்.

# மாணவர்களுக்கு தீமை பயக்கும் தொலைக்காட்சி



இன்றைய நவீன உலகில் மாணவர்களை திசை திருப்பும் சாதனமாக தொலைக்காட்சி தொழிற்படுகின்றது. இன்று திரைப்படங்கள், பாடல்கள், நாடகங்கள் என்ற பெயரில் இளம் தலைமுறையினர் பாதிக்கப்படுகின்றனர்.

தொலைக்காட்சியின் பயன்கள் ஒன்று, இரண்டைத் தவிர, ஏனையவை அனைத்தும் தீய விடயங்களாகவே காணப்படுகின்றன. பாலில் ஒரு துளி நஞ்சைக் கலந்தால் பால் முழுவதுமே நஞ்சடைந்துவிடும், பழுதடைந்துவிடும். அவ்வாறே தொலைக்காட்சியும். இன்று மாணவர்கள் தொலைக்காட்சியில் வரும் நடிகை, நடிகர்கள் போன்று தம்மை மாற்றிக்கொள்ள முனைகின்றனர். அது மட்டுமன்றி; திரைப்படங்களில் சண்டையிடுவது போன்றும் தம்மைத் தயார்படுத்திக்கொள்கின்றனர்.

இதனால், சமூகத்தில் பலவிதமான பிரச்சினைகள் தோன்றியுள்ளன. மேலும், பெற்றோருக்கு கீழ்ப்படியாமை, ஆசிரியர்களுக்கு மதிப்பளிக்காமை போன்றவற்றுடன் புகைத்தல், மதுபாவனை போன்ற தீய செயல்களிலும் ஈடுபடுகின்றனர். மாணவர்கள் கல்வி சம்பந்தமான விடயங்களைவிட, சினிமா பற்றியே அதிகம் தெரிந்து வைத்துள்ளனர். அவர்கள் கல்வி கற்பதற்காக ஒதுக்கும் நேரத்தைவிட, தொலைக்காட்சி பார்ப்பதற்கே அதிக நேரத்தை செலவிடுகின்றனர். இதுவே மாணவர்களை தவறான வழியில் இட்டுச் செல்ல வழிவகுக்கின்றது. அத்துடன், பார்வை தொடர்பான கோளாறுகளையும் மாணவர்கள் எதிர்கொள்கின்றனர். எனவே, தொலைக்காட்சி என்பது மாணவர்களுக்கு நன்மையைவிட தீமையையே அதிகம் கொடுக்கிறது எனலாம்.

எம்.என்.மாஹிரா,
மொ/அளுபொத மு.ம.வித்.,
படல்கும்புர.





# எங்கும் பொங்கும் பொங்கல்

தைத்திருநாள் இல்லமெல்லாம்
தவிர்த்திடும் தைப்பொங்கல்
இத்தனை நாள் காத்திருந்தோம்
இனிய தமிழ்ப் பொங்கல்!

வெண்ணிறப் பால் பொங்கிவர
வெடி வெடிப்போம் நாங்கள்
இன்னமுதப் பொங்கலுண்ண
இணைந்து நிற்போம் நாங்கள்!

சு.க.சாரா பாஜெஸ்றின்,
அல்-ஹம்றா வித்., மருதமுனை.

# தாயே சுவர்க்கம்!



ஆன்மிகக் குரு ஒருவரைச் சந்தித்தான் பாண்டியன்.

'சுவாமி நான் இறந்த பின்னர் சுவர்க்கத்திற்குச் செல்ல விரும்புகின்றேன். அதற்காக, நான் வாழ்ந்துகொண்டிருக்கும் போதே, என்னைத் தயார்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளில் இறங்கவுள்ளேன். அதற்கு நான் என்னென்ன விரதங்கள் இருக்க வேண்டும்? எந்தெந்த நாட்களில் இருக்க வேண்டும்? எந்த மாதிரியான யாகங்கள் செய்ய வேண்டும்? எந்தெந்த புண்ணிய ஸ்தலங்களுக்கெல்லாம் செல்ல வேண்டும்? எவ்வாறான புண்ணிய தீர்த்தங்களில் நீராட வேண்டும்? யார் யாருக்கு என்னென்ன தரும காரியங்கள் செய்ய வேண்டும்? என்பதைத் தெளிவாக, எடுத்துக் கூறுங்கள்'' என்று ஆன்மிகக் குருவை வணங்கி நின்றான்.

குரு அவனைக் கூர்ந்து அவதானித்தார்.

''உன்னைப் பெற்ற தாய் உயிரோடு இருக்கிறாரா?'' என்று கேட்டார்.

''இருக்கிறார்.... ஆனால், நான் அவர்களோடு இல்லாமல் என் குடும்பத்தோடு தனியாக இருக்கிறேன். நான் அவர்களைப் பார்த்த நாளே நினைவில் இல்லை'' என்றான்.

''உன் தாய்தான் சுவர்க்கம். நீ அவர்களைக் கவனிக்காமல் இருப்பதால், இப்போது நீ மிகப்பெரிய பாவியாக இருக்கிறாய். இப்போது நீ இறந்தால் நிச்சயம் நரகத்துக்குத்தான் செல்வாய். எந்த யாகமும்,தருமமும், வணக்கமும், புனிதமும் உன்னை சுவர்க்கத்திற்குக் கொண்டு செல்லாது!'' என்றார் குரு.

''ஐயோ! என்ன சொல்கிறீர்கள் சுவாமி?'' என்று பதறினான் பாண்டியன்.

''ஆமாம்! உன்னை ஈன்றெடுத்த உன் தாய்தான் உன்னுடைய சுவர்க்கம். நீ சற்று முன்னர் கூறிய அனைத்து நல்ல காரியங்களையும்விட இன்முகத்தோடும், உள்ளன்போடும் உன் தாய்க்குப்பணிவிடை செய்.... நீ நிச்சயம் சொர்க்கம் செல்வாய்!'' என்றார் குரு.

சாட்டையால் அடிவாங்கியதைப் போல் உணர்ந்த பாண்டியன் உடனே தன் தாயின் இருப்பிடம் நோக்கி ஓடலானான்.

# ஆறுமுக நாவலர்



* ஆறுமுக நாவலர் ஒரு பெரியார்.
* இவர் சைவமும் தமிழும் வளரப் பணி செய்தார்.
* ஆறுமுக நாவலரின் தந்தை கந்தப்பிள்ளை. இவரது தாயார் சிவகாமி அம்மையார்.
* ஆறுமுக நாவலர் நல்லூரில் வாழ்ந்தார்.
* இவரது இயற்பெயர் ஆறுமுகம் என்பதாகும்.
* திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு 'நாவலர்' என்னும் பட்டத்தை வழங்கியது.
* இதன் பின்னர் இவரை 'ஆறுமுக நாவலர்' என அழைத்தனர்.
* ஆறுமுக நாவலர் பல நூல்களை எழுதியுள்ளார்.
* பல சைவப் பாடசாலைகளை உருவாக்கியுள்ளார்.
* கோவில்களில் சமயப் பிரசங்கங்கள் நிகழ வழிகாட்டினார்.
* இவரது நினைவாக முத்திரை வெளியிடப்பட்டுள்ளது.

முஸ்தாக் அஹமத் சியாம்,
வாடியதன்ன மு.வித்., ஹெம்மாதகம.

# தொடர் மொழிக்கு ஒரு மொழி

* விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது.
  தீர்ப்பு
* வழக்கைத் தாக்கல் செய்பவர்,
  பிரதிவாதி
* தானும் உண்ணாமல் பிறருக்கும் கொடாதவன்.
  உலோபி
* கடவுள் இருக்கின்றார் என நம்புபவன்.
  ஆத்திகன்
* தேர்தலில் போட்டியிடுபவர்.
  வேட்பாளர்
* அகர வரிசைப்படி சொற்களுக்கு பொருள் கூறும் நூல்.
  அகராதி
* வீண் செலவு செய்பவன்.
  ஊதாரி
* சுதந்திரம் அற்று வாழ்பவன்.
  அடிமை

ஜெ.கெனத்,
பட்டானிச்சூர், வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு

கிண்ணியா மாஞ்சோலை நிஸா முன்பள்ளியின் 15 ஆவது பூர்த்தி விழாவின் கலை நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் தி/கிண்ணியா அப்துல் மஜீது மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வுகளில் கலந்துகொண்ட சிறார்களையே படங்களில் காண்கிறீர்கள்.



கண்டி உடதலவின்னையைச் சேர்ந்த ரஸீன்-ரிஹானா தம்பதியரின் செல்வப் புதல்வன் அம்ஹர், தனது இரண்டாவது பிறந்தநாளை 24.01.2013 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர், சகோதரர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.



இல - 35/17, ரஹ்மானியா மாவத்தை, மாவனல்லையைச் சேர்ந்த ஹுஸைன்-சுப்ரியா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா சஹ்னா, 21.01.2013 அன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் சகோதரர்கள், உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



மட்டக்களப்பு கல்லடி-உப்போடையைச் சேர்ந்த மனோகர்-செல்வி தம்பதியரின் ஏக புதல்வன் விஜயராஜ், தனது மூன்றாவது பிறந்தநாளை 13.01.2013 அன்று கொண்டாடினார். இவரை குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கல்லடி உப்போடை பேச்சியம்பாளின் அருள்பெற்று பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்: ம.ஹருஸ்ராஜ்)*

# ஹிந்தகல விகாரை ஓவியங்கள்

ஹிந்தகல கற்குகை விகாரை ஓவியங்கள் 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.



ஹிந்தகல விகாரை கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கனால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. இது ஆங்கில ஆள்பதி எட்வட் பான்ஸ் அவர்களாலும் திருத்தியமைக்கப்பட்டது.

உயரமான இடத்திலுள்ள மேட்டுப்பகுதியில் உள்ள



குகையில் பலகைகளால் செப்பனிடப்பட்டு விகாரை அமைக்கப்பட்டுள்ளது. விகாரையின் இருபுறங்களிலும் விராந்தை காணப்படுகின்றது. விராந்தையின் சுவர்களில் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இந்த சுவரில் யன்னல் ஒன்று பொருத்துவதற்காக உடைக்கப்பட்டமையால், சிறந்த ஓவியங்கள் அழிந்துபோயுள்ளன. இதனால் சுதை தட்டுகள் பழுதடைந்துள்ளன. இங்கு ஆரம்பத்தில் பல சித்திரங்கள் காணப்பட்டாலும் இன்று அவை மனிதர்களாலும் இயற்கையாலும் (மழை, வெயில், தூசு) சிதைவுற்றுக் காணப்படுகின்றன. இங்குள்ள சித்திரங்கள் பௌத்த ஜாதகக்கதைகளுடன் சம்பந்தப்பட்டவை. இங்கு மூன்று புத்தர் சிலைகள் காணப்படுகின்றன. கூரையில் காணப்படும் ஓவியங்கள் 'மகா பராஜய' எனும் ஜாதகக் கதையை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

இன்று காணப்படும் ஓவியங்கள் பல கண்டி ராச்சியக் காலத்துக்குரியவை. இங்குள்ள ஓவியங்களை வரைவதற்கு மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை ஆகிய நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இங்குள்ள ஓவியங்கள் சிறந்த ஓவியர்களால் வரையப்பட்டவை அல்ல என்றும் அவற்றின் ரேகைகளை நோக்கும்போது சிறந்த பயிற்சி பெறாதவர்களாலேயே அவை வரையப்பட்டிருக்கலாம் என்பதும் ஆய்வாளர்களின் கருத்தாகும்.

ஓவியம் வரைவோம் - 138
ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்

## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எஃப். அஃப்ஹா,
மஹ்மூத் மகளிர் கல்., கல்முனை.



டி.ஜீவராணி,
முஸ்லிம் பாலிகா ம.வித்., ஹைத்துறை.



யோ.ஹரிசங்கர்,
யாழ். இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.



செ.மிதுஷிகன்,
கதிரேசன் மத்.கல்., நாவலப்பிட்டி.

ஷஹீர் அஹமட்,



ஜீ.பிரேம்நாத்,
கிளாஸ்கோ த.வித்.,
அக்கரப்பத்தனை.



ஜெ.சமீர்,
அன்னூர் தே.கல்., ஓட்டமாவடி-1





ஏ.யதுஷாந்,
சிவசக்தி வித்., தம்பிட்டிமுனை.



எஃப்.சுமையா,
தல்துவை அவிஸ்ஸாவலை.



த.திரேஷா?,
இளவாலை
கென்றியரசர் கல்.,
பண்டத்தரிப்பு.

### பிறந்தநாள் வாழ்த்துக்கள் குறித்து கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்புபவர்கள், குறித்த பிறந்தநாள் நிகழ்வுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அந்த வாழ்த்துக்கள் எமக்குக் கிடைக்கக்கூடிய வாறு அனுப்பி வையுங்கள். தாமதித்துக் கிடைப்பவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருங்கண்டங்களின் சிகரங்கள்



**ஆசியா கண்டம்:** ஆசியாவின் மிக உயரமான மலையான எவரெஸ்ட் சிகரம் ஆசியாவில் மட்டுமன்றி உலகிலேயே மிகவும் உயரமான மலைச்சிகரமாகும். இது 29, 032 அடி உயரம் கொண்டது. திபெத் நாட்டிற்குரிய இமயமலைப்பகுதியில் அமைந்துள்ள எவரெஸ்ட் சிகரத்தினை ஏறி அடைவதனை மலையேறுபவர்கள் பெரும் சவால்மிக்க சாதனையாகக் கருதுகின்றனர். இம் மலைச்சிகரங்களில் ஏறுவதற்கு ஏப்ரல், மே மாதங்கள் உகந்த காலமாக இருக்கின்றன. 1953 ஆம் ஆண்டிலேயே முதன்முதலாக எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைக்கப்பட்டுள்ளது.



**ஐரோப்பா கண்டம்- எல்புருஸ்:** உயரம் 18,510 அடி மீற்றரில் கூறுவதாயின் 5,642 மீற்றர் உயரம் கொண்டது. இது ஐரோப்பா கண்டத்தின் மிகவும் உயரமான மலைச் சிகரமாகும். ரஷ்யாவின் ஜோர்ஜியா கொக்கேசெஸ் மலைப்பகுதியில் அமைந்துள்ளது. மலை ஏறுபவர்களின் பிரபல்யம் மிக்க மலையான எல்புருசினைக் கடப்பதற்கு உகந்த காலமாக ஜுன், ஜுலை, ஒகஸ்ட் மாதங்கள் கருதப்படுகின்றன.1874 இல் முதன்முதலாக இந்த மலையில் ஏறி சாதனை படைக்கப்பட்டுள்ளது.



**அவுஸ்திரேலியா பெருங்கண்டம் - கொசியுஸ்கோ:** 'கொசியுஸ்கோ' மலைச்சிகரமானது, அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்சில் அமைந்துள்ளது. இது 7,310 அடி உயரம் கொண்டது. மீற்றர்களில் 2,228 உயரம் கொண்டது. 1834 இல் முதன்முதலில் இந்த மலை உச்சியை அடைந்துள்ளனர். டிசம்பர், ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்கள் இதில் ஏறுவதற்கு உகந்த காலமாகக் கருதப்படுகின்றது.



**அமெரிக்க பெருங்கண்டம்- மிகின்லி:** ஐக்கிய அமெரிக்காவின் 'எலஸ்கா' மலைப்பகுதியில் 'மிகின்லின் சிகரம்' அமைந்துள்ளது. 20,327 அடி உயரம் அதாவது, 6,196 ஆகும். ஏப்ரல், மே, ஜுன் மாதங்களில் மலையில் ஏறுவதற்குப் பொருத்தமான காலநிலை நிலவுகின்றது. 1931 இல் முதன்முதல் இந்த மலையைக் கடந்துள்ளனர்.



**ஆபிரிக்கா பெருங்கண்டம் - 'கிளிமன்ஜாரோ'**
ஆபிரிக்கா கண்டத்தின் மிகவும் உயரமான மலையே கிளிமன்ஜாரோ ஆகும். இதன் உயரம் 19,341 அடிகள். மீற்றரில் 5,895 உயரம் கொண்டது. 1889 இல் முதன்முதலாக இந்த மலையில் ஏறியுள்ளனர். டிசம்பர், ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஜுன், ஜுலை, ஆகஸ்ட் மாதங்கள் இந்த மலையில் ஏறுவதற்கு உகந்த மாதங்களாகும்.


Columbus ZOO and Aquarium

LIONS CLUBS INTERNATIONAL

LIONS CLUB OF PANADURA CREATORS

## விஜய் கடற்கரைக் காட்சி - அகில இலங்கை சித்திரப் போட்டி - 2013

அன்பு பிள்ளைகளே,

கடந்த வருடங்களைப் போலவே இம்முறையும் 'கடற்கரைக் காட்சி' எனும் தலைப்பிலான சித்திரப் போட்டியை அகில இலங்கை ரீதியில் நடாத்துவதற்கு உத்தேசித்துள்ளோம். கடல் ஆமைகள் பாதுகாப்புத் திட்டம் இப்போட்டியை நடத்துகின்றது.

கடற்கரையோரக் காட்சியொன்றை நீங்கள் நேரில் தரிசித்து கண்ட காட்சியாக சித்திரமொன்றை வரைந்து அனுப்பவேண்டும். கடற்கரையோர சுவாத்தியத்தை வெளிப்படுத்தும் எந்தவொரு காட்சியையும் சித்திரமாக வரைந்து அனுப்பலாம்.

### பங்குபற்றக்கூடியோர்

பாலர் வகுப்பு மாணவர்கள்.

ஆரம்பப் பிரிவு 8 ஆம் ஆண்டிற்கு கீழுள்ள மாணவர்கள்.

கனிஷ்ட பிரிவு - 7, 8, 9, 10 ஆம் ஆண்டு மாணவர்கள்.

சிரேஷ்ட பிரிவு - 11, 12, 13 ஆம் ஆண்டு பிரிவு மாணவர்கள்.



### பரிசளிப்பு விழா

அகில இலங்கை ரீதியில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு பணப்பரிசு வழங்கப்படும்.
பரிசளிப்பு விழா மார்ச் மாதத்தில் குறிப்பிட்ட ஒரு தினத்தில் கொழும்பில் நடைபெறும்.

| பாலர் பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 3,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 2,500.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 2,000.00 |

| கனிஷ்ட பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 7,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 5,000.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 3,000.00 |

| ஆரம்பப் பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 5,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 3,000.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 2,000.00 |

| சிரேஷ்ட பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 10,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 7,000.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 5,000.00 |

### போட்டி விதிமுறைகள்

* ஒருவர் ஒரு சித்திரத்தை மாத்திரமே அனுப்ப முடியும்.
* சித்திரத்தின் அளவு 35 செ.மீற்றர்X45 செ.மீற்றர் அளவில் இருத்தல் வேண்டும்.
* எந்தவொரு வர்ணப் பூச்சையும் பயன்படுத்தலாம்.
* ஏற்றுக் கொள்ளப்பட்ட நடுவர் குழுவொன்றினால் பரிசுக்குரிய சித்திரங்கள் தெரிவு செய்யப்படுவதுடன், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதாகவும் அமையும்.
* சித்திரம் வரையப்படும் தாளின் பின்புறத்தில் போட்டியாளரின் பெயர், வீட்டு முகவரி, பிறந்த தினம், பாடசாலை, பாடசாலை முகவரி, போட்டிப் பிரிவு ஆகியனவும் குறிப்பிடப்படல் வேண்டும்.
* போட்டிக்கு அனுப்பப்படும் சித்திரங்கள் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி ஒப்படைக்கப்பட மாட்டாது.
* போட்டி முடிவுகள் 'விஜய்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

### சித்திரங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:

'கடற்கரைக் காட்சி' அகில இலங்கை சித்திரப் போட்டி - 2013
கடல் ஆமைகள் பாதுகாப்புத் திட்டம்,
இல-11, பெரேரா மாவத்தை,
மடசும்புர, பாணந்துறை.

### போட்டி முடிவு: 2013 ஜனவரி 31 ஆம் திகதி

மேலதிக விபரங்களுக்கு 077-9317619 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும். வெற்றியீட்டப்படும் சித்திரங்களின் உரிமை கடல் ஆமைகள் பாதுகாப்புத் திட்டத்திற்கு உரித்துடையதே.

சான்றிதழ்: ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்படும் சிறந்த சித்திரங்களை வரைந்த நூறு பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் அண்ணாவுக்கும் தம்பிக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**මල්ලි:** **අයියේ, අපි බයිසිකල් පදිමුද?**
අய்யே, அப்பி பைசிகல் பதிமுத?
தம்பி: **அண்ணா, நாங்கள் சைக்கிள் ஓட்டுவோமா?**

**අයියා:** **මල්ලි, අපි හවස පිට්ටනියට ගිහින් බයිසිකල් පදිමු.**
மல்லி, அப்பி ஹவச பிட்டனியட்ட கிஹின் பைசிகல் பதிமு.
அண்ணா: **தம்பி, நாங்கள் பின்னேரம் மைதானத்திற்குப் போய் சைக்கிள் ஓட்டுவோம்.**

**මල්ලි:** **අයියේ, ඔයාගේ යාලුවොත් පිට්ටනියට එනවාද?**
அய்யே, ஓயாகே யாலுவொத் பிட்டனியட்ட எனவாத?
தம்பி: **அண்ணா, உங்களுடைய தோழர்களும் மைதானத்திற்கு வருவார்களா?**

**අයියා:** **ඔව් මල්ලි, එනවා.**
ஒவ் மல்லி, எனவா.
அண்ணா: **ஆம் தம்பி, வருவார்கள்.**

**මල්ලි:** **එයාලත් එක්ක බයිසිකල් පදිනවාද?**
எயாலத் எக்க பைசிகல் பதினவாத?
தம்பி: **அவர்களோடு சைக்கிள் ஓட்டுவீர்களா?**

**අයියා:** **ඔව් මල්ලි, අපි බයිසිකල් පදිනවා.**
ஒவ் மல்லி, அப்பி பைசிகல் பதினவா.
அண்ணா: **ஆம் தம்பி, நாங்கள் சைக்கிள் மிதிப்போம்.**

**මල්ලි:** **ඔයාලා තව මොනවද සෙල්ලම් කරන්නේ අයියේ?**
ஓயாலா தவ மொனவத செல்லம் கறன்னே அய்யே?
தம்பி: **நீங்கள் வேறு என்னென்ன விளையாடுவீர்கள் அண்ணா?**

**අයියා:** **අපි ක්‍රිකට් සෙල්ලම් කරනවා.**
அப்பி கிரிக்கெட் செல்லம் கறனவா.
அண்ணா: **நாங்கள் கிரிக்கெட் விளையாடுவோம்.**

**මල්ලි:** **හොඳයි අයියේ.**
ஹொந்தய் அய்யே.
தம்பி: **நல்லது அண்ணா.**

ஆங்கிலம் கற்க வேண்டுமா ? இதோ.....
**60 நாட்கள் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்**
அடிப்படையில் இருந்து ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்குமென விசேடமாக தயாரிக்கப்பட்ட
BASIC/SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH. COURSE
பாடநெறியை தொடரும் உங்களுக்கு
அழகிய டீ சேட் T.SHIRT ஒன்றும் ஆங்கிலத்தில் கடிதம் எழுதுவது எப்படி பயிற்சி புத்தகம் ஒன்றும் இலவசமாக வழங்கப்படும்.
**2013ம் ஆண்டுக்கான தினக்குறிப்பேடு DAIRY ஒன்று இலவசம்.**
* 60 நாட்கள் முடிவில் சரளமான ஆங்கில அறிவுடன் அங்கிகாரம் பெற்ற *DIPLOMA IN ENGLISH* சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படும்.
* வயது கட்டுப்பாடோ.ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. தமிழ் எழுத. வாசிக்க தெரிந்திருந்தால் போதுமானது.
மேலதிக விபரங்களை பெற பெயர். முகவரியை தெளிவாக 0777-220002 க்கு SMS செய்யுங்கள்
**THE ENGLISH LANGUAGE INSTITUTE**
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002




**நிகழ்கால வினைமுற்று வாக்கியத்தை (Present Perfect Tense) இறந்தகால தனி வாக்கியத்துடன் (Past Simple Tense) ஒப்பிட்டுப் பயில்வோம்.**

(அ) நான் எனது பணத்தை நேற்றுக் கொடுத்தேன்.
I gave my money yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

(ஆ) நான் எனது பணத்தை ஏற்கனவே கொடுத்துவிட்டேன்.
I have already given my money.
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

(இ) நான் எனது பணத்தை தற்போதுதான் கொடுத்துள்ளேன்.
I have just given my money.
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

* I gave.
நான் கொடுத்தேன்.

* I have given.
நான் கொடுத்துவிட்டேன்.
(கொடுத்துள்ளேன்)

**குறிப்பு:** gave என்பது தனி வினைச்சொல் (Simple Verb).
have given என்பது கூட்டு வினைச்சொல் (Compound Verb)

(ஈ) நீ அந்த வேலையை நேற்றுச் செய்தாய்.
You did that work yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

(உ) நீ அந்த வேலையை ஏற்கனவே செய்துவிட்டாய்.
You have already done that work.
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

(ஊ) நீ அந்த வேலையை தற்போதுதான் செய்துள்ளாய்.
You have just done that work.
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

(எ) நாங்கள் இங்கே நேற்று வந்து சேர்ந்தோம்.
We arrived here yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

(ஏ) நாங்கள் ஏற்கனவே இங்கு வந்து சேர்ந்துவிட்டோம்.
We have already arrived here.
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

(ஐ) நாங்கள் தற்போதுதான் இங்கு வந்து சேர்ந்துள்ளோம்.
We have just arrived here.
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

(ஒ) அவர்கள் நேற்று இந்தியாவுக்கு சென்றனர்.
They went to India yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

(ஓ) அவர்கள் ஏற்கனவே இந்தியாவுக்கு சென்றுவிட்டனர்.
They have already gone to India.
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நயனத்தைத் தேடியபோது...

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் நான் ஜப்பான் சென்றிருந்த போது, மலேசியச் சஞ்சிகை ஒன்றில் எனது சிறுகதை ஒன்று வெளிவந்தி




ருந்தது. 'பாட்டிக்கு வந்த காதல் கடிதம்' என்பது கதையின் தலைப் பாகும். தலைப்பைப்போலவே கதையும் சுவாரஸ்யமானதாக இருந்திருக்கவேண்டும் என்பதை யும், மலேசிய வாசகர்கள் அதனை ரசித்திருக்கிறார்கள் என்பதையும், எனக்கு வந்த வாசகர் கடிதங்களி லிருந்தே தெரிந்து கொண்டேன்.





அதனால், அந்த சஞ்சிகையைத் தேடுவ தில், விட்டில் இந்தியாவிலுள்ள பத்திரிகைகள் விற்கின்ற கடைகளை நாடி அலைந்தேன். 'நயனம்' என்பது அந்த சஞ்சிகையின் பெய ராகும். நான் கதை எழுதிய காலத் தில் அந்த சஞ்சிகை இந்தியாவிலி ருந்து வெளியாகும். அது 'குமுதம்' வடிவில் வெளிவந்தது. விட்டில் இந்தியாவில் நான் வாங்கிய 'நயனம்', 'விஜய்' வடிவில் தற்போது வெளியாவதை அறியமுடிந்தது. மலேசியாவிலிருந்து பத்துக்கும் மேற்பட்ட தமிழ் தினசரிகளும், சஞ்சிகைகளும் வெளி வருவதானது, தமிழ்பேசும் மலேசியர் பத்திரிகை, சஞ்சிகை வாசிப்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர் என்பதை எனக்குப் புரிய வைத்தது.

## மலேசியா வந்த இந்தியத் தொழிலாளர்

இந்தியா பிரித்தானியர் வசமான தும், இந்தியத் தொழிலாளர்கள் மலேசியாவுக்கு அனுப்பப்பட்டு அவர்கள் கரும்புத் தோட்டங்களிலும், கோப்பித் தோட்டங் களிலும் வேலைக்கு அமர்த்தப் பட்டுள்ள னர். பின்னர் இவர்கள் இறப்பர், தென்னை பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மலேசியா வந்த இந்தியத் தொழிலாளர்கள் கட்டுமானப்பணிகளிலும், பாதை அமைப் புப் பணிகளிலும், பாலங்கள் அமைப்ப தற்கும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பாதை அமைப்பு வேலையில் ஈடுபட்டிருந்த போதே,இந்திய நிர்மாணப்பணி யாளர்களால் அடர்ந்த காட் டில் இருந்த ப(ட்)டுக் கோவைக் கண்டுபிடித்து, அங்கு ஆலயம் அமைத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## தேசிய பள்ளிவாயில்



1965 ஆம் ஆண்டில் நிர்மாணித்து முடிக் கப்பட்டுள்ள கோலாலம்பூரில் அமைந் துள்ள மலேசியாவின் தேசிய பள்ளிவாச லாகக் கொள்ளப்படும் 'மஸ்ஜித் நெகாரா' 13 ஏக்கர் நிலப்பரப் பில் அமைந்துள்ளது. இப் பள்ளிவாயிலில் 15,000 பேர் ஒரே நேரத்தில் தொழுகையை நிறை வேற்றிக்கொள்ள முடியும். விரிக்கப்பட்ட குடை ஒன்றின் அமைப் பிலான இப்பள்ளிவாயி லின் மினாரா 73 அடிகளைக் கொண்டது. மஸ்ஜித் நெகாரா நிர்மாணிப்பதற்கு முன்னர், விட்டில் இந்தி யாவிற்கு அருகில் அமைந்துள்ள ஜாமக் மஸ்ஜிதே மலேசியாவின் தேசியபள்ளிவா யிலாக குறிப்பிடத்தக்கது. சிங்கப்பூர், மலேசியா பிரதான இடங்களை ஓரளவு பார்த்த பின் எனது சுற்றுலாப்பயணம் பூர்த்தி யாகியது.



தான் தங்கி யிருந்த ஹோட் டலில் இருந்து இரவோடிரவாக எனது தாயகம் நோக்கிச் செல்லும் நோக்கில் விமானநிலையத்தை அடைந்தேன். வரும் வழியில் புத்ரஜயா எனும் அந்த அழகிய நகரத்தை தூரத்தே யிருந்து மீண்டும் ஒருமுறை பார்க்க முடிந்தது. விமானப் பயணச் சீட்டுப் பதிவு செய்யப்பட்டு விமானத்தில் ஏறி இருக்கையில் அமர்ந்தேன். இனிமை யான, பசுமையான நினைவுகளைச் சுமந்தபடி, அழகிய மலேசியாவை விட்டு நீங்கி எனது தாயகம் நோக்கிப் புறப்படத் தயாரானேன்.

(பயணம் நிறைவுற்றது)

**குறிப்பு:** இந்தப் பயணக் கட்டுரை எழுதப்படுவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது, மலேசிய நாட்டின் வரலாறா கும். அந்நாட்டின் அபிவிருத்திப் போக்கை விஜய் வாசகர்களுக்கு எடுத்துக் கூறுவதும், விஜய் வாசகர்களில் பெரும்பாலானோர் மாணவர்களாக இருப்பதால், வரலாற்றுப் பின்னணியுடன் பயணக் கட்டுரை எவ்வாறு அமையவேண்டும் என்பதை மாணவர்களுக்கு உணர்த்துவதும் இதன் நோக்கமாகும். அதனால், மலேசியாவி லுள்ள களியாட்டப் பகுதிகள் (Theme Parks) பற்றி இக்கட்டுரையில் விரிவான விளக்கம் கொடுப்பதைத் தவிர்த்துள்ளேன்.


# விஜய் உடன் 'TOP NEWS' வழங்கும் 2 8GB பென் ட்றைவ் பரிசுகள்!!!




ஒவ்வொரு மாத இறுதியிலும் இங்கு கேட்கப்படும் கேள்விக்கான விடை 'Top News' SMS சேவையில் இடம்பெறும் அறிவுபூர்வ தகவலில் உள்ளடங்கியுள்ளது. அந்த விடையைக் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

கேட்கப்படும் கேள்விக்கான விடையினை அறிந்துகொள்ள அருகில் காட்டப் பட்டவாறு உங்கள் Dialog தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

'விஜய்' பத்திரிகையில் ஒவ்வொரு மாதத்திற்குமென வாராந்தம் வழங்கப்படும் அனைத்துக் கூப்பன்களையும் சேகரித்து மாத இறுதியில் கேட்கப்படும் கேள்விக்கான விடையுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். 'விஜய்' பத்திரிகையில் வழங்கப்பட்டுள்ள கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப் படும் 2 நபர்களுக்கு 8GB பென் ட்றைவ் ஒன்று பரிசாக வழங்கப்படும்.

**அனுப்பும் முறை:**





**கூப்பன் - ஜனவரி**
(இந்த மாதத்திற்கான அனைத்து கூப்பன்களையும் சேகரித்து ஒன்றாக அனுப்பவும்)

இல - 03


விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 5
வெற்றுக்கட்டங்களுக்கு வரவேண்டிய பொருத்தமான படங்களை இனங்கண்டு, உரிய இலக்கங்களைக் குறிப்பிடுக




## 3
எழு வித்தியாசங்களில் X அடையாளமிடுக



## 4
உருக்களின் எண்ணிக்கையுடன் இணைக்க








தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.01.30 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 401
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## ஆங்கிலப் பதம் தருக — 1


1. கிளை - ..............................
2. அப்பியாசக் கொப்பி - ..............................
3. தீவு - ..............................
4. சமுத்திரம் - ..............................
5. மைதானம் - ..............................
6. நீர்யானை - ..............................

## பொருத்தமற்ற சொல்லில் கோடிடுக — 2

1. தாதி/சகோதரன்/பயணிகள்/மாணவன்
2. கடல்/நீர்வீழ்ச்சி/குளம்/உப்புநீர்
3. பால்/குளிர்பானம்/தேநீர்/மாம்பழம்
4. மிதிவண்டி/படகு/கப்பல்/வள்ளம்
5. ஊதா/இளஞ்சிவப்பு/செவ்வரத்தை/சிவப்பு

## அறிவுக்கு விருந்து - 398 விடைகள்

**போட்டி: 01**




**போட்டி: 03**




**போட்டி: 04**

(A)




(B)

1. ஈ - இலையான்
2. அபாயம் - ஆபத்து
3. ஒப்பந்தம் - உடன்படிக்கை
4. வெட்கம் - நாணம்

**போட்டி: 05**

1. வறுமை 2. வள்ளல் 3. சமையலறை
4. தினசரி 5. விண்வெளி

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 398 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எம்.இமான், பண்ணவ, கொபேகன.

**போட்டி: 02**
எஃப்.ஷஹானா, பிரதான வீதி, பலாங்கொடை.

**போட்டி: 03**
பே.கஜதீபன், பிரதான வீதி, மாதகல்.


**போட்டி: 04**
சி.ஹரிப்பிரியா, வின்சர் அவனியூ, தெஹிவளை.

**போட்டி: 05**
எம்.ஹிஸாட், கண்டி வீதி, மெல்வத்த.

**பாராட்டுப் பெறுவோர்:**

- ஸஹ்ரா ஜாபிர், பேருவளை.
- அ.அருளரசன், யாழ்ப்பாணம்.
- அப்ரான் அஹமட், ஐயன்கேணி.
- அத்தீப் முஹமட், ஓட்டமாவடி - 03.
- பி.சரணியா, பண்டாரவளை.
- எஸ்.பிரஹாசினி, நானுஓயா.
- ந.ரனோஜனி, அக்கரைப்பற்று.
- சில்மி ரஷீட், தர்கா நகர்.
- எம்.முப்தி, அக்குறனை.
- ஸைனா மரியம், புத்தளம்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.17



**மேலிருந்து கீழ்**

01. இந்தியாவில் பட்டாசு தயாரிக்கும் இடம்.
02. பெண்கள் அணியும் உடையில் ஒருவகை.
04. இது ஒலிக்கும். (தலைகீழ்)
05. தினமும் மாறும்.
10. 'பாட்டன்' என்பதன் எதிர்ப்பாற்சொல். (தலைகீழ்)

**இடமிருந்து வலம்**

01. இலங்கையில் வெளியான பத்திரிகையொன்று.
04. சந்திரன்.
06. காதில் அணிவது.
07. கோவிலிலும் உண்டு.
08. திருடன் என்பதன் எதிர்ப்பாற்சொல். (மாறியுள்ளது)
09. அரவத்தில் ஒரு வகை.

### குறுக்கெழுத்துப் போட்டி இல.16 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மீ | ன் | 2 பா | டு | ம் | |
| 3 தி | க | தி | | | |
| | பா | | 4 க | ட | ம் |
| 5 ப | ப் | பா | சி | | ர |
| 6 தி | னை | | வு | 7 த | 8 க |
| | 9 யா | து | | லை | 10 ம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# ஸ்தாபகருக்கு மரியாதை



**1921** இல் தந்தை பேடன் பவல் அவர்கள் தர்மராஜா கல்லூரிக்கு வருகை தந்திருந்தபோது, அவருக்கு மரியாதை செலுத்தும் அரிய வாய்ப்பு தர்மராஜா சாரணர் குழாமிற்குக் கிடைத்தது. அந்தவகையில், தர்மராஜா சாரணர்கள் மூன்று வெவ்வேறு நிகழ்வுகளில் ஸ்தாபகருக்கு மரியாதைச் செலுத்தினர்.

1924 இல் இலங்கையின் முதலாவது மூத்த சாரணர் விருது (Bushman Thong Scout) வழங்கப்பட்டதுடன், தர்மராஜா கல்லூரிக்குச் சொந்தமான 57 ஏக்கர் காணியில் அமைந்துள்ள Lake view Park ஆனது மறைந்த அந்நாள் அதிபர் P.de S.Kularatne இனால் 1924 இல் சாரணர் குழாமிற்கு ஒதுக்கப்பட்டது.பின்னர், 1984 இல் இந்த சாரணர் மையத்திற்கு 'Lake view Park சர்வதேச சாரணர் மையம்' என பெயர் சூட்டப்பட்டது. இது பழைய ராஜன் சாரணர் மகேந்திர நம்புகேயினால் வடிவமைக்கப்பட்ட லண்டனில் உள்ள புகழ்பெற்ற Gilwell Park இன் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த சாரணர் மையத்திற்கு சகல வசதிகளுடன்கூடிய ஒரு புதிய தோற்றம் கொடுக்கப்பட்டுள்ளதுடன், நூற்றாண்டு விழாவுக்காக, இங்கு வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு இடமளிக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் நிறைவு செய்தது.



தர்மராஜா சாரணியத்தின் முக்கிய அடையாள நிகழ்வானது, 1930 இல் அதன் ஸ்தாபகர் J.H. de Saram தேசிய சாரணர் சங்கத்தின் முதலாவது சுதேச தலைமை ஆணையாளராக நியமிக்கப்பட்டமை ஆகும். அவர் சாரணர் இயக்கத்துக்கு தொடர்ச்சியாக 12 ஆண்டுகள் வெற்றிகரமாக தமது சேவையை வழங்கினார். இது ஒரு வரலாற்று நிகழ்வாகவும் அமைந்தது.

தர்மராஜா சாரணர் குழாம் ஆனது, 1958 ஆம் ஆண்டின் சிறந்த குழாமுக்கான Sir.Andrew Caldecott Silver விருதையும் இதே ஆண்டில் கண்டி மாவட்ட ஒன்றுகூடலில் சிறந்த சாரணர் குழாமிற்கான Island Merit கொடியையும் வென்றது.

## விதிவிலக்கான மூன்று தசாப்தங்கள்

மறைந்த Bas Wimalachandra 1967 வரை மூன்று தசாப்தங்களாக சாரணர் குழுவின் தலைவராக இருந்து வரலாற்றையே மாற்றியமைத்தார். இவரது நீண்டகால சேவையின் போது சாரணர்கள் பல்வேறு சாதனைகளுக்காக பாராட்டுகளைப் பெற்றனர்.

அவரது காலத்தின் பின்னர் சலிய ராஜகருணா, சாரணர் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் சாரணர் பயிற்சி, மலையேறுதல், நடைபயணம் என்பனவற்றில் முன்னேற்றம் காணப்பட்டதுடன், மிகச் சிறந்த ஒழுக்கமும் காணப்பட்டது. அவரின் உன்னத வழிகாட்டுதலின்கீழ், தர்மராஜா கல்லூரி சாரணர்கள் மீண்டும் Island Merit கொடியை வென்றனர்.

1971 இல் B.N.B. டொலபிஹிள்ள சாரணர் குழுவின் தலைவராக இருந்த காலத்தில் உலக சாரணர் பணியகத்தின் ஆசிய பசுபிக் சாரணர் ஆணையாளரது இலங்கை விஜயத்தில், அவரை வரவேற்கும் பெருமையை தர்மராஜா கல்லூரி சாரணர்கள் பெற்றனர். 1977 முதல் 1993 வரை சாரணர் குழுத் தலைவராக இருந்த M.B. வீரசேகர டொலபிஹிள்ளவின் காலத்தில் வியக்கத்தக்க தலைமைத்துவத்திற்கு விருது பெற்று மற்றுமொரு சாதனையை படைத்தது.

## பழைய சாரணர்கள் உலகம்

1977 இல், எம்.பண்டார வீரசேகர, தர்மராஜா கல்லூரி சாரணர் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். அவர் அந்தக் குழுவின் திறமையான புதுமைவாதியாக இருந்தார். 1978 நொவெம்பர் 12 இல் இலங்கையின் முதலாவது பழைய சாரணர் சங்கமான 'Old Rajans Scout Association' ஐ உருவாக்கினார்.

தர்மராஜா கல்லூரியின் அந்நாள் அதிபரான A.P. குணரட்னவின் அர்ப்பணிப்பும் மற்றும் வழிகாட்டலினூடாக இந்த சாதனைகள் இடம்பெற்று வரலாற்றில் மிளிர முடிந்தது.

## நூற்றாண்டு JIM

1987 இல், தர்மராஜா கல்லூரி தனது நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடியபோது, கண்டி தர்மராஜா கல்லூரியின் முதலாவது சாரணர் குழு மற்றும் பழைய ராஜன்ஸ் சாரணர் சங்கம் இணைந்து அந்த நூற்றாண்டுவிழா ஞாபகார்த்தமாக 'Centenary Jim 1987' ஐ ஒழுங்கு செய்தது. அந்த விழா எந்தவொரு சாரணனும் பெருமையுடன் நினைவுகூரும் வகையில் பிரமாண்டமான நிகழ்ச்சியாக அமைந்திருந்தது. தலைமை விருந்தினராக வருகை தந்திருந்த அந்நாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன அவர்கள் இந்த நிகழ்வை அருமையான முறையில் நடத்தி வைத்தார்.

குழுவுக்குப் பல சாதனைகளைப் பெற்றுக்கொடுத்த M.B. வீரசேகரவை 1993 இல் சரத் மடாராச்சி சாரணர் குழுவின் தலைவராக நியமனம் செய்தார். அவரது சாரணர் நிபுணத்துவம் மற்றும் ஆதிக்கம் பல சாதனைகளையும் நிகழ்த்தியது.

1993 முதல் 2006 வரை தர்மராஜா கல்லூரியின் சாரணர் குழு தொடர்ந்து இலங்கையின் சிறந்த குழுவுக்கான ஐலண்ட் மெரிட் கொடியை வென்றது.

2007 இலிருந்து தர்மராஜா கல்லூரி சாரணியம் அதிபர் எஸ். கீர்த்திரத்னேவினால் சிறப்பாக வழிநடத்தப்படுகின்றது.

## ஜம்போரி சாதனையை உடைத்தல்

லண்டன் கில்ஸ்வெல்பார்க்கில் நடைபெற்ற 21 ஆம் உலக ஜம்போரியில் (உலக சாரணிய நூற்றாண்டு விழா) தர்மராஜா கல்லூரியிலிருந்து 31 சாரணர்கள் இலங்கை சார்பில் பங்குபற்றினர்.

ஒரே கல்லூரியில் இருந்து அதிக எண்ணிக்கையான சாரணர்கள் உலக ஜம்போரியில் பங்குபற்றியது இலங்கை சாரண வரலாற்றில் இதுவே முதல் தடவையாக இருந்தது.

## மறக்க முடியாத சாதனைகள்

தர்மராஜா கல்லூரி சாரணர்கள் 1985 முதல் 2007 இமயமலையை ஏழு தடவைகள் ஏறி தாய் நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

### மறக்க முடியாத நிகழ்வுகள்

* 1936 இல் கோல்டன் ஜூபிலி ஜம்போரி.
* 1973 இல் 60 ஆவது ஆண்டு நிறைவு ஜம்போரி.
* 1983 இல் 70 ஆவது ஆண்டு நிறைவு ஜம்போரி.
* 1987 இல் தர்மராஜா நூற்றாண்டு JIM.
* 1994 இல் 'தேசத்துடன் கொண்டாட்டம்'.
* 1997 இல் 'ராஜன்ஸ் வெஞ்சர்'.
* 2000 இல் மில்லேனியம் ஜம்போரி.
* 2003 இல் 90 ஆவது ஆண்டு நிறைவு ஜம்போரி.
* 'விஸ்வேராத்ரிய'.
* 'பொர்மடி ஒன்டு போர்டிடுடே'.
* 2008 இல் 95 ஆம் ஆண்டு RANSAI.
* குழு பாசறைகள்.




தயாரிப்பு:
**சாரணர் ஜெரம் டி சில்வா**
உதவி: சாரணன் ஜே.பெ.ராகுல், 2 ஆம் யாழ்ப்பாணம், பரி/யோவான் கல்லூரி சாரணர் குழாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எனகொண்டா' வை நெருங்கிய புகைப்படக் கலைஞர்...!


பெரிய விலங்கொன்றை உட்கொண்டு அசைய முடியாமல் இருக்கின்ற எனகொண்டாவை அருகே சென்று புகைப்படம் எடுக்கின்றார் பிரன்கோ.

உலகிலேயே மிகப்பெரிய பாம்பு என்றால் அது 'எனகொண்டா' தான். அனேகமாக 'எனகொண்டா' திரைப்படத்தின் மூலமாகவே, பலரும் இதை அறிந்துகொண்டனர். மிகவும் கொடியதாகவும் பலம் பொருந்திய தாகவும் இருப்பதே இதன் சிறப்பம் சமாகும். இத்தனை கொடியதான எனகொண்டா பாம்பினை நீருக்கடி யில் சென்று அருகாமையில் இருந்து புகைப்படம் எடுப்பதென்றால் எப்படி இருக்கும்?

இத்தகைய ஆபத்தான காரியத் தில் ஈடுபட்டவர் பிரன்கோ பென்ஃபி என்பவராவார். இவரது, வயது 53. சுவிட்ஸர்லாந்தைச் சேர்ந்த இவர் நீரில் மூழ்கிப் புகைப்படம் எடுப்ப தில் வல்லவராவார். இத்தகைய ஆர்வம் மிக்க இவர் சுவிஸிலிருந்து வட அமெரிக்கா நோக்கிப் பயணித்து அங்கு பிரேஸிலின் 'மாட்டோ குரோஸோதோ சுல்' எனப்படும் பிரதேசத்திற்கு சென்ற போதே, இந்த ஆச்சரியத்தை நிகழ்த்தியுள்ளார்.


கரைப்பகுதியொன்றில் இரைதேடும் எனகொண்டா.


இங்குள்ள ஆழமான ஓர் ஆற்றில் மூழ்கியே மேற்படி எனகொண்டா வைப் புகைப்படம் எடுக்கும் ஆபத்தான காரியத்தில் அவர் ஈடு பட்டார். இதன்போது, இவரிடம் எந்தவொரு தற்காப்பு ஆயுதமும் இருக்கவில்லை. 'கெமரா' மாத்தி ரமே இவரது கையில் இருந்தது.

நீரில் மூழ்கி நீந்திக்கொண்டிருந்த பிரான்கோ எதிர்பாராத விதமாகவே எதிரிரே எனகொண்டாவை எதிர்நோக்கினார்.

இருப்பினும், பதற றப்படாமல் சமயோசி தமாக தன்னைக் கட் டுப்படுத்திக் கொண்டு அந்த எனகொண் டா வைப் புகைப் படம் எடுப்பதற் குத் தயாரானார். இவர் எதிர் கொண்ட அந்த 'எனகொண்டா' வின் நீளம், 26 அடிகளாகும். (8 மீற்றர்)

ஏற்கனவே தயார் நிலையி லிருந்த கெமராவைக் கொண்டு சமயோசிதமாக அதனை அவர் புகைப்படம் எடுத்தபோது, மற்றுமொரு 'எனகொண்டா' வையும் காணும் சந்தர்ப்பம் கிடைக்கும் என்று அவர் சிறிதும் எதிர்பார்த்திருக்க வில்லை. இந்த இரண்டாவது 'எனகொண்டா' ஓர் ஆற்றின் கரையோரப் பகுதியிலேயே காணப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் அது பெரிய ஒரு மிருகத்தை விழுங்கி யிருந்த நிலையில் அசைவற்றுக் கிடந்தமையால் அதனை இலகுவாக புகைப்படம் எடுக்கக்கூடியதாக இருந்தது.




இரைதேடும் ஆவலில் இருந்த எனகொண்டாவை சந்தர்ப்பம் பார்த்துப் புகைப்படம் எடுத்துள்ளார் பிரன்கோ.

தொடர்ந்து தென் அமெரிக் காவின் நடுப்பகுதியில் உள்ள 'மாட்டோ குரோஸோதோ சுல்' என்ற பிரதேசத்தில் பத்து நாட்கள் பயணித்த இவர், வெவ்வேறு இடங்களில் 6 பெண் எனகொண்டாக்களை யும் கண்டுள்ளார்.

மேலும் இதுபற்றி பிரன்கோ குறிப்பிடுகையில், "நான் இதுபோன்று இதற்கு முன்னர் எந்தவொரு பாம்பையும் நெருங்கியதில்லை. ஆனால், மிகச்சிறிய பாம்பினை விட, இத்தகைய பெரிய பாம்புகள் விஷமில்லாதவை என்றே நான் கருதுகிறேன்" என்றும் குறிப்பிடுகின்றார்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஜனவரி மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8 Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday January 23, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org